உ

# யாழ்ப்பாண வைபவம்.

இ∴து

யாழ்ப்பாணம் தென் கோவையிலிருந்த
கதிரேசமுதலியார் கனகசபை என்பவர்
கேட்டுக் கொண்டபடி

பரிசோதித்துப் பிரசுரித்தவர்

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை

## வே. சதாசிவம்பிள்ளை

திருகோணமலை
கோணேஸ்வர அச்சகத்தில் மறுபதிப்பாக
அச்சிடப்பெற்றது.
1965.

விலை சதம். 50.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை.

"யாழ்ப்பாண வைபவம்" எனும் பெயரைக் கொண்ட இச்சரி திர நூல், எமது மூதாதையராகிய வே. சதாசிவம்பிள்ளை அவர்களா 1884ம் ஆண்டில், சென்னை ஸ்கொட்டிஸ் பிறசில் (The Scottish Pres Madras. by Graves, cookson and Co.)" அச்சிடப்பட்டபிரதியை ம பதிப்பாக அச்சிட்டு வெளியிடுகிறேன். இந்த மூலப்பிரதியை பா காப்பாக வைத்திருந்து அச்சிடுவதற்கு தந்துதவிய, திரிகோணம அகிலேசபிள்ளை அழகைக்கோன் அவர்கட்கு எமது நன்றி உரித்தாகுக

மூளாய் ரோட்,
வட்டுக்கோட்டை.

டாக்டர். ச. மஹோற்கட



## சிறப்புப்பாயிரம்

ஸ்ரீ கைலாயபரம்பரை

திருவாவடுதுறை ஆதீனத்துச் சீஷரும், மஹாவித்துவான்

## ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

மாணாக்கருளொருவருமாகிய தில்லைவிடங்கன்

## சு. வேலுசாமிப்பிள்ளை

இயற்றிய

## நேரிசையாசிரியப்பா.

திருவளர் மருமத்துருவளர் கவுத்துவ
மாமணியொளிதருதூரமணிவண்ணன்
தனக்குமகவான்றனக்குமுரிய
மருகனாகியமுருகவேளினிது
வீற்றிருந்தருளும்பேற்றினையுடைய
நல்லைமாநகர்நல்லைமாநகர்
வண்ணார்பண்ணைவண்ணார்பண்ணை
நத்தூர்பொய்கைப்புத்தூர்வல்வை
பருத்தித்துறையோடருத்தித்துறைபல
மட்டுவளர்பொழில்வட்டுவளநகர்
மாவிட்டபுரமுதன்மேவிட்டபுரங்களைப்
பற்பலவுறுப்பாப்பொற்புறத்தாங்குபு
கல்வியுளாரையுஞ்செல்வமுளாரையுங்
கற்புடையோரையும்பொற்புடையோரையும்
புத்திமான்களையும்பத்திமான்களையும்
அருமையுளாரையும்பெருமையுளாரையும்
சாதிமான்களையுநீதிமான்களையுந்
தனக்கணியெனவணிந்துனற்கருமகமியற்
றிந்திரரைப்புணர்சுந்தரியைப்போல்
அருந்தவமாக்கைவருந்தவங்காக்குபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேயபல்வேந்தரைநாயகராகக்
கொண்டயாழ்ப்பாணக்கொண்டனேர்குழவான்
தன்வயினுதித்தமின்வயின்முகில்போற்
புவிமகிழ்தரப்பலகவிமழைபொழியும்
வாகனற்புகழ்மயில்வாகனப்புலவன்
சொன்னயமுதலியபன்னயமுறநல
கத்தியனின்சொலாற்கத்தியரூபமா
வகுத்தயாழ்ப்பாணவைபவநூலைச்
செகத்தினிற்பரப்பவச்சிடுகெனப்பணிந்தனன்
ஈழநாட்டினுஞ்சோழநாட்டினும்
தொண்டைநாட்டினும்பண்டைநாட்டினும்
பண்ணியநல்லபுண்ணியவசத்தாற்
பொருளதுபடைத்தோன்றெருளுறுகல்வி
ஒழுக்கநுண்ணறிவுமழுக்கமிலன்பு
நிறைகுணமாண்புபொறைதயையீகை
வாய்மைமேன்மைதூய்மையாதி
பல்குணந்தழீஇயவொல்கலில்புகழ்க்கு
நேரபிதானம்வீரசுந்தர
வரகுணசேகரவைரமுத்தென்னும்
குரிசிலதனைத்துரிசிலவன்சீர்
நாட்டியசென்னைஸ்காட்டீஷ்யந்திர
சாலையிற்றுயரையாலயத்தானும்
புன்னகமுனிவனும்பன்னகமுனிவனும்
தேவருமற்றுளவேவரும்போற்ற
அமையாமென்றேளுமையாணங்கை
காணியதில்லைச்சேணிவந்தொளிரும்
ஆடகமன்றுணடகம்பயிலும்
சூலாயுதற்றொழும்வேலாயுதத்திருப்
பெயரினன்செய்தவப்பயனெனவுதித்தோன்
சிட்டுறுபுலவர்சேர்வட்டுநகரினன்
மெய்வயனத்தன்சைவநூலுணர்ச்சியன்
நூல்பலபதித்ததன்மேல்வருபுகழினன்
சிவனடியவரைச்சிவனெனக்கருதுவோன்
தவலிலஞ்சீர்த்திதிவள்சதாசிவவேள்
பரிவிற்பிழையறப்பரிசோதித்து
நிறங்கிளரக்கரநெடிது
பிறங்கவச்சிட்டுப்பிரசரித்தனனே.

உ
கணபதிதுணை

# யாழ்ப்பாண வைபவம்.

ஒண்ணலங்கொண்மேக்கெறூஉனென்றேது
பெயர்பெற்றவிறலுலாந்தேசண்ணல்
பண்ணலங்கொள்யாழ்ப்பாணப்பதிவரலா
றுரைத்தமிழாற்பரிந்துகேட்கத்
திண்ணிலங்குவேற்பஃடக்கைச்செகராச
சேகரன்றொல்லவையிற்சேர்ந்தோன்
மண்ணிலங்குசீர்த்திவையாமரபின்மயில்
வாகனவேள்வகுத்திட்டானே. (க)

உரராசர்தொழுகழன்மேக்கெறூஉனென்றேது
முலாந்தேசுமன்னனுரைத்தமிழாற்கேட்க
வரராசகைலாயமாலைதொன்னூல்
வரம்புகண்டகவிஞர்பிரான்வையாபாடல்
பரராசசேகரன்றன்னுலாவுங்காலப்
படிவழுவாதுற்றனசம்பவங்கடீட்டுந்
திரராசமுறைகளுந்தேர்ந்தியாழ்ப்பாணத்தின்
செய்திமயில்வாகனவேள்செப்பினனே. (உ)

| | |
|---|---|
| சிங்கையாரியன் | குணவீரன் |
| குல சேகரன் | கனகசூரியன் |
| குலோத்துங்கவரதன் | பரராசசேகரன் |
| மார்த்தாண்டகுணபூஷணன் | பரநிருபசிங்கம் |
| வீரோதயசெயவீரன் | பரராசசிங்கன். |

கிரேத திரேத துவாபரமென்னு முதல் யுகமூன்றிலும், இலங்காபுரியை இராக்ஷதராண்டாரென்று, இதிகாசபுராணங்கள் கூறுகின்றன. இராவணசங்காரத்தின் பின், இலங்கை அரசாட்சியைத் தசரதராமனாற்பெற்ற விபூஷணன் கலியுகம் முக்கூற்றிலும் அரசுசெய்தபின் நாராயணமூர்த்தியின் உத்தரவுபெற்று வைகுந்தபதவியில் தேகமுத்தியடைந்தானென்பதும், அவன் நீங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் வேற்றரசிரின் கீழ்க்குடிகளாயிருப்பது நெறியல்லவென்று இராக்கதக் குடிகளாயுள்ளோரனைவரும் இலங்கையைவிட்டு வலைசைவாங்கினார்களென்பதுங் கன்ன பரம்பரை.

இற்றைக்கு உச00—வருஷங்களுக்குமுன் இவ்விலங்கை நாடு யானை, கரடி, புலி முதலிய விலங்குசாதிகள் சஞ்சரிக்கும் வனாந்தரமாயிருந்தது. அவ்வனாந்தர மத்தியிற் சில வேடரேயன்றி வேறொரு மானிட சீவனுமிருந்ததில்லை அக்காலத்தில் வங்கதேசத்திலே, க்ஷத்திரிய மரபிலே பிறந்து, இலாடதேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விசயனென்பன் மகா துட்டனாயிருந்ததினால் அவனைப் பிதாத்துரத்திவிட, அவன் அங்குமிங்குமலைந்து ஒருவருமிடங்கொடாததினாற் காசியிற் போயிருந்தான். அவ்விடம் இருக்கையிற் சொப்பனத்திற் காசிவிசுவேசர் தரிசனமாகி நீ உன் கவலையை நீக்கி இலங்கை மத்தியிலுள்ள, கதிரைமலையிலே போயிரு, அந்நாடு உனக்குடையதென்று உத்தரவு கொடுக்கப் பெற்றதனால், அவ்விசயகுமாரன் நீலகண்டாசாரியரென்னுங் குருவை அழைக்க, அவர் தமது தேவியாகிய அகிலாண்டவல்லியம்மாளையும், புத்திரர், புத்திரிகளையும், மருமக்களையுஞ் சேர்த்துக் கொண்டு தமது பரிவாரங்களுடன் புறப்பட்டு யாவருங் கதிரைமலையிற் சேர்ந்தார்கள்.

அக்காலத்தில், இலங்கையிற் குடிசனம் இல்லாமையால் விசயகுமாரன் குடியேற்றக் கருதிப், பலமுயற்சிகளைச் செய்தான். இலங்கை, இராக்ஷத நாடாயிருந்ததினால் அங்கே வரமாட்டோமென்று கன்னியாகுமரி தொடங்கி, இமயமலை பரியந்தமுள்ள சகலரும் மறுத்துச் சொன்னார்கள். அக்காலம், மகதநாட்டிற் சனங்களில் அனேகர் புத்தசமயத்துக்குட்பட்டதினால், மகதராசன் அவர்களை அந்நாட்டைவிட்டுத் துரத்திவிட, அவர்களிற் சிலர் இமயத்துக்கு வடக்கேயும், சிலர் பிரமபுத்திர நதிக்குக் கிழக்கேயும், பிரமதேசத்தைச் சேர்ந்த சீயம் முதலிய நாடுகளிலும் அலைந்து திரிந்தார்கள். அந்தச் செய்தியை விசயராசனறிந்து அவ்விடஞ் சென்றிருந்த பல குடிகளை அழைத்துவந்து, எத்திசைகளிலுங் குடியேற்றி, நகரப்பிரதிஷ்டைசெய்து, அரசியற்றவாரம்பித்தான். அந்தப் புத்தர்கள் சிங்களமென்று பெயருள்ள நாட்டிற் குடியேறினதாற் சிங்களரெனப் பெயர் பெற்றார்கள். குடிகளை வசப்படுத்திக் கொள்ளும் நோக்



கத்தினால் இராசன், சமய வழிபாட்டைக் குறித்துச் சனங்களுக்கிட்டத்தைக் கொடுத்துந் தனது சமயாசாரவொழுக்கந் தவறாமல் நடந்து கொண்டான். அரசியற்ற ஆரம்பிக்கு முன்னமே தனதரசாட்சிக்குப் பாதுகாப்பாக நாலு திக்கிலும் நாலு சிவாலயங்களைக் கட்டுவித்ததுமன்றி நந்தவனங்கள் கூபங்கள் முதலிய யாவற்றையும் ஸ்தாபித்தான். கிழக்குத் திசைக்குத் தம்பலகாமத்திற் கோணேசர் கோவிலை எழுப்பியும், மேற்குத் திசைக்கு மாதோட்டத்திலே பழுதுபட்டுக்கிடந்த திருக்கேதீச்சரத் சிவாலயத்தைப் புதுப்பித்தும், தென்றிசைக்கு மாத்துறையிற் சந்திரசேகரவீசுரன் கோவிலை எழுப்பியும், வட திசைக்குக் கீரிமலைச் சாரலில் திருத்தம்பலையென்னும் பதியிலே திருத்தம்பலேசுரன், திருத்தம்பலேஸ்வரியம்மன் கோவில்களையும் தன் சமீபத்திற் கதிரையாண்டவர் கோவிலையுங் கட்டுவித்து, அவ்வாலயங்களுக்குப் பூசை நடத்தும்படி, மேற்குறித்த நீலகண்டாசாரியனின் மூன்றாங்குமாரன் வாமதேவாசாரியனென்னுங் காசியிற் பிராமணனையும் அவன் பன்னியாகிய விசாலாட்சியம்மாளையும் அழைப்பித்து, அக்கிரகார முதலிய வசதிகளுங்கொடுத் திருத்தி வைத்தான். அக்கோவில் அவ்விடத்தே தோன்றிய காரணத்தால் அக்கிராமங் கோவிற்கடவையெனப் பெயர் பெற்றது.

முற்காலத்திலே நகுலமுனிவரென்னு மோரிருஷி அங்குள்ள மலைச்சாரலிலிருந்து தீர்த்தமாடி வந்தபோது தனக்கிருந்த கீரிமுகமாறி மானுடமுகம் பெற்றதினால் அத்தல விசேஷத்தையுந் தீர்த்த மகிமையையுங் குறித்து வியப்புற்றுத் தவஞ்செய்தற்கேற்ற இடமெனக் கருதி அம்மலையின் குகையிலே வாசஞ் செய்து கொண்டிருந்தார். அம்முனிவர் விசயராசன் கட்டுவித்த பலவாலயங்களிற்றங்கி வழிபட்டு வந்தார். அந்தவிருஷிக்குக் கீரிமுகமாறிய காரணத்தால் அம்மலை கீரிமலையெனப் பெயர் பெற்றது. அதனால், கோவில்களும், நகுலேஸ்வரன் கோவிலென்றும், நகுலாம்பிகையம்மன் கோவிலென்றும் வழங்கி வந்தன விசயராசன் திருப்பணியை நிறைவேற்றியபின் தனது இராச்சியம் முழுதுஞ் சுற்றிப் பார்த்துக் கொண்டு கதிரமலையைச் சேர்ந்தான். அதன்பின் தம்பலகாமம் என்னுமிடத்தை இராசதானியாக்கிக் கொண்டு தன் மனைவியையும் இரண்டு மக்களையுந் தள்ளி விட்டுப் பாண்டிநாட்டுப் பெண்ணொருத்தியை விவாகம் பண்ணிச் சில வருஷம் அரசியற்றிப் புத்திர சந்தானமில்லாமல் இறந்து விட்டான்.

Digitized by Noolaham Foundation..
noolaham.org | aavanaham.org

அவன் மந்திரி இராச்சியத்தைத் தளம்பவிடாமல் ஒரு வருஷங் காப்பாற்றிய பின்பு விசயராசன் சகோதரனுடைய குமாரன், பாண்டுவசுவென்பவனை அழைத்து வந்து அரசனாக்கினான். பின்பு இவன் குலத்தரசர் தலைமுறை தலைமுறையாக அநேக காலம் இவ் இலங்கை நாட்டை அரசாண்டு வந்தார்கள்.

சாலிவாகன சகாப்தம் ௩௫௮ம் வருஷத்தில் மனுநீதி கண்ட சோழராசன் மகன் குழக்கோட்டு மகாராசன், யாத்திரை பண்ணித் திரிகோணமலையிற் சேர்ந்து கோணேசர் சிவாலயத்தைத் தரிசித்துத் தம்பலகாமத்திற் பழுதுபட்டுக் கிடந்த கோணேசர் கோவிலைப் பழுது பார்ப்பித்து, அக்கிரகார முதலியவைகள் அனைத்தையுந் திருத்துவித்துக் கொண்டிருந்தான். அக்காலத்திலே கண்டி நாட்டிலிருந்து இலங்கை முழுதும் அரசாட்சி செய்த பாண்டு மகாராசன் மண்திடல் என்றழைக்கப்பட்ட இந்நாட்டில் வந்தான்.

அப்போ இவ்விடத்திற் குடியிருந்த சிங்களவரிற் சிலர் கீரிமலைக்குச் சமீபமாயிருந்த கரைதுறைகளிற் குடியிருந்த முக்குகரைக் கொண்டு மீன்பிடிப்பித்துக் குவித்துக் கண்டி நாடு முதலிய இடங்களுக்குக் கொண்டுபோய் வியாபாரஞ் செய்வது வழக்கமாயிருந்தது. உசுமன் சேர்ந்தான் என்று பெயரிய முக்குகத் தலைமை வலைஞர்கள். தங்கள் வேலையாட்களைக் கொண்டு மீன் பிடிப்பித்துக் கொடுத்து வந்தார்கள். சிங்களவர் நிழல் வசதிக்கும் நீர்வசதிக்குமாக அங்குள்ள மலைச்சாரலிலிருக்குஞ் சிவாலயங்களிற் தங்கிக் கோவிற் பிரகாரங்களில் மீன்காயப்போட்டுத் திருக்கிணறுகளில் தண்ணீரள்ளவுந் தொடங்கினதினாற் பிராமணர் கோவில்களைப் பூட்டிக்கொண்டப்புறம் போயொதுங்கி விட்டார்கள். கோவில்களிற் சிலகாலம் பூசையில்லாமலிருந்தது.

அதை அவ்விடத்திருந்த பாண்டு மகாராசனறிந்து, விசாரணைசெய்து, சிங்களவருக்கு நியாயமான தண்டனை புரிந்து முக்குகக் குடிகளைத் துரத்தி விட்டான்.

உசுமன் முதலிய முக்குக வலைஞர்கள் அவ்விடம் விட்டு மட்டக்களப்புக்குப் போய் பானகையிரவி என்னுமிடத்திலிருந்தார்கள். சிலர் இந்நாட்டின் மறு துறைகளிலிருந்தார்கள். உசுமன்துறை சேர்ந்தான்களமெனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பெயர்கள் உசுமன் சேர்ந்தானென்பவர்களால் வந்தன. மலித்தூண்டன் முதலிய இடங்களின் முக்குகரிருந்ததில்லை.

பாண்டு மகாராசன் இங்கேயிருக்க, அவன் மனைவி குழக்கோட்டு மகாராசன் கோணேசர் கோவிற்றிருப்பணி செய்விக்குஞ் செய்தியைக் கேட்டுத் தங்கள் சேனைகளிற் சிலரை அழைத்து. நீங்கள் போய்க் குழக்கோட்டனை இந்நாட்டினின்றுந் துரத்திவிட்டு வாருங்களென்று செலவு கொடுத்தனுப்பச் சேனைகள் தம்பலகாமத்திற் போய் அவ்விடத்திற் குழக்கோட்டரசன் செய்விக்கும் பெரிய வேலைகளையும், அவனுடன் நின்ற சேனைத் திரள்களையுங் கண்டு பயந்து நடுக்கமுற்று ஒன்றும் பேசாமல், தூதாக வந்தவர்கள்போல் நின்றார்கள். அரசனவர்களைப் பார்த்து, ஏன் வந்தீர்களென அவர்கள் மகாராசனே, இந்தத் திருப்பணிக்கு வேண்டிய பொருளேதேனுந் தேவையோவென விசாரித்து வாருங்களென்று எங்கள் அரசி அனுப்ப வந்தோமென்றார்கள். அரசன் அவர்களை நோக்கி வேண்டிய சகல வஸ்துக்களுஞ் சம்பூரணமாயிருக்கின்றன; ஒன்றும் வேண்டியதில்லை. உங்கள் சுக வதிசயங்களை விசாரித்தேனென்று உங்களின் ராணிக்கி அறிவியுங்களென்று சொல்லிச் சேனைக்கு உசிதமான விருந்து கொடுத்து அனுப்ப அவர்கள்போய் நடந்த செய்திகள் யாவற்றையும் அறிவித்தும் விருந்திற் பரிமாறிய பதார்த்தங்களின் மதுரத்தையும் வியந்து ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். இராசாத்தி அந்தச் செய்தியைக் கேட்டு யாதொரு பேச்சுமின்றி இருந்தாள்.

குழக்கோட்டு மகாராசன் திருப்பணியை முடித்து, அவ்வாலயப் பணிவிடைக்குங் கோணேசலிங்கத்துக்குப் பூசனை புரிவிப்பதற்குஞ் செலவுகளுக்காக ஏழு நாடுகளில் வயல் நிலங்களையுந் தோப்புகளையும் ஏற்படுத்தி அவைகளிற் பயிரிட்டு வருமானஞ் செலுத்தும்படி வன்னியர்களை அழைப்பித்துக் குடியிருத்தித் தன்னாட்டுக்கு மீண்டான். அந்நாள் முதல் ஆலயப் பணிவிடைகளும் அந்தணர் கிராமங்களும், மடங்களுஞ் சம்பிரமமாக முன்போல் நடந்து வந்தன. சில காலத்தின் பின் குழக்கோட்டு மகாராசன் தேகவியோகம் அடைந்துவிட்டான். அதன்பின் மேற்கூறிய ஏழு நாடுகளிலும் பயிர்க்குடிகளாயிருந்த வன்னியர்கள் மிகவும் பெருகினார்கள். பாண்டி நாட்டிலிருந்து பின்னும் ஐம்பத்தொன்பது வன்னியர்கள் வந்து, அவர்களுடன் கூடிக் கொண்டார்கள். வருமானமுங் குடிகளும் வரவரப் பெருகிக் கொண்ட

டியால் அரசாட்சியின்றிப் பலமுறை கலகம் நேரிட்டன. அவ்வேழு நாடுகளுங் கோணேசர் கோவிலுக்குச் செல்வதேயன்றிக் கண்டி நாட்டரசருக்கு யாதொரு நயமுமில்லாமையால் அந்நாட்டரசர்கள் அவற்றைப் பராமுகம் பண்ணிவிட்டார்கள்.

அக்காலத்திற் சந்திரவன்னியனும், வேறனேக குறுநில மன்னருந்தோன்றிப் பலவாறு கலகஞ்செய்து மரித்துவிட, வன்னியர்களனைவரும் ஒத்திணங்கித் தங்கள் சாதியிற்றலைமைப்பட்ட ஏழுபேரைத் தெரிந்து, அவ்வேழு நாடுகளுக்குந் தலைவராக்கிக் கீழமைந்திருந்தார்கள். அது முதல் அத்தலைவரின் சந்ததியாராயிருந்த வன்னியர்களாண்டதினால வன்னிநாடெனப் பெயர் பெற்றது. சாலிவாகன சகாப்தம் ருகரு-ம் வருஷத்தில் இலங்கைக்கரசனாயிருந்த, அக்கிரமபோதி மகாராசன் இவ் வன்னியர்கள் தாங்களும் அரசரென்று இறுமாப்புக் கொண்டதை அறிந்து, அவ் வன்னியர்களின் அதிகாரத்தைக் குறைத்துத் தன்னாணையைச் செலுத்தி வந்தான். அது முதல் அவ் வன்னியர்கள் நாட்டதிகாரிகளாய் மாத்திரம் ஆண்டு வந்தார்கள். சாலிவாகன சகாப்தம் எகள-ம் வருஷத்தில் விசயராசனின் சகோதரன் மரபிற்பிறந்த உக்கிரமசிங்கனென்னும் அரசன், வடதிசையினின்று வெகு திரளான சேனையுடன் வந்து போராடிச் சிலகாலமாக இழந்திருந்த இவ்விலங்கையில் அரைவாசியைப் பிடித்துக்கொண்டு, கதிரைமலையிலிருந்து அரசாண்டு வந்தான். தென்னாடுகளை வேற்றரசனாண்டு வந்தான்

இந்த உக்கிரசிங்க மகாராசனுக்குச் சிங்கத்தையொத்த முகமும் மானுட தேகமுமிருந்தது. இவன் நகுலேசர் கோவிலைத் தரிசிக்கும் பொருட்டு வந்து, கீரிமலைச் சாரலிலே முற்காலத்திற் சோழராசன் தான் தீர்த்தமாடித் தங்கியிருக்கக் கட்டுவித்த மாளிகையிலே இறங்கினான். சோழராசன் மாளிகை கட்டுவித்ததினால் அந்த இடம் வளவர்கோன் பள்ளமென வழங்கி வந்தது.

அவனவ்விடமிருக்கத் தொண்டைநாட்டை அரசாண்ட தொண்டைமானென்னும் அரசன், கரணவாய் வெள்ளைப்பரவை என்னுமிடங்களில் நல்லுப்புப் படுஞ் செய்தியைக் கேட்டுத் தன் பரிவாரங்களுடன் கீரிமலைச் சாரலில் வந்திறங்கி, இவனைச் சந்தித்து, இந்நாட்டில் விளையுமுப்பிலே தனக்கு வேண்டியளவுக்கு வருடந்தோறும் விலைக்குக் கொடுக்கும்படியும். உப்புப்,



படுமிடத்துக்குச் சமீபமாக மரக்கலங்களைக் கொண்டு வந்து ஏற்றவும் ஒதுங்கி நிற்கவும் வசதியாகக் கடலிலே நின்றோராறு வெட்டுவித்துக் கொள்ளவும் உத்தரவுகேட்டான். உக்கிரசிங்க மகாராசன் உத்தரவு கொடுக்கத் தொண்டைமானங்கிருந்த சிற்றாற்றை மரக்கலமோடத்தக்க ஆழமாயும், விசாலமாயும், ஒதுக்கிடமாகத் தக்கதாயும் வெட்டுவித்துத் தன்னூருக்கு மீண்டான். அது முதல் அது தொண்டமானாறென் றழைக்கப் படுகின்றது. உக்கிரசிங்க மகாராசன் தன் சேனைகளோடு கதிரமலைக்கு, வன்னிமார்க்கமாகச் செல்லுகையில் வன்னியர்கள் ஏழுபேருமெதிர்கொண்டு வந்து தாங்கள் திறைகொடுத்து உத்தரவு பெற்றுக் கொண்டார்கள். அரசன் இராச்சியமெங்குந் தன்னாணை செல்லவுந் தனக்கு வரவேண்டிய திறையைக் கோணேசர் கோவிலுக்குக் கொடுக்கவுமுடன்பாடு பண்ணுவித்துக் கொண்டு கதிரமலையிற் சேர்ந்தான்.

இவைகள் சம்பவித்த எட்டாம் வருஷத்திலே சோழதேசாதிபதியாகிய திசையுக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லி என்பவள் குன்ம வியாதியினால் மெலிந்தவளாய், அவ்வியாதி வயித்தியரால் நீக்க முடியாமையால் தீர்த்த யாத்திரை செய்தா லொருவாறு நீங்குமெனக் கருதிக் காவிரிப்பூம் பட்டினத்தினின்று புறப்பட்டு எங்கும் போய்த் தீர்த்தமாடி வருகையிற், சாந்தலிங்கனென்னுமொரு சந்நியாசிகண்டு, உன் வியாதி பண்டிதராற் குணமாகத் தக்கதன்று. இப்பொழுதெடுத்த முயற்சியே சுகந்தரத்தக்கது. இலங்கையின் வடமுனையிலே கீரிமலையென்றொரு மலையுண்டு. அது சமுத்திர தீரத்திலுள்ளது. அங்கே உவர்ச்சல மத்தியிற் சுத்த தீர்த்தமும் மலையருவித் தீர்த்தமுங் கலந்த உத்தமதீர்த்த மொன்றுண்டு. உலகத்திலுள்ள எந்தத் தீர்த்தத்திலும் முக்கியமானது. அதிலே நீ போய் ஸ்நானம்பண்ணிச் சிலகாலந்தங்கி இருப்பாயாகிற் சுகமடைவாய் என்றுசொல்ல, அதற்கிசைந்து, உடனே திரவியங்களை எடுத்துக்கொண்டு, மாருதப்பிரவல்லி புறப்பட்டுத், தாதிமாருந் தோழிமாருஞ் சேனைவீரருஞ் சூழ்ந்துவரக். கீரிமலைச் சாரலில் வந்திறங்கி, நகுலமுனிவரைக் கண்டு பஞ்சாங்க நமஸ்காரஞ் செய்து அவரால் ஆசீர்வாதம்பெற்று, அந்தத்தலவிசேஷத்தையுந் தீர்த்தமகிமையையும் தான்தீர்த்தமாடினதினால் தனக்கிருந்த கீரிமுகம் மாறி மனுமுகம் பெற்றதையும், முனிகூறக் கேட்டு. மகா சந்தோஷத்துடன் தீர்த்தமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிச் சிவாலய தரிசனஞ் செய்து அங்கு ஓர் இடத்தில் பாளையம் போட்டுக் கொண்டு சிலகாலம் அவ்விடத்திலிருந்தாள். இப்படிச் சுவாமி தரிசனஞ்செய்து தீர்த்தமாடி வருகையில் அவளுக்கிருந்த குன்மவலியுந் தீர்ந்து குதிரை முகமும் மாறிற்று. மாறவே, மாருதப்பிரவல்லியின் யவ்வன சொருபத்தைக் கண்டவர்கள் ஆச்சரியமடைந்தார்கள்.

அக்காலத்திலே உக்கிரசிங்கமகாராசன் நகுலேசர் கோயிலைத் தரிசிக்க மூன்றாம்தரம் வந்திறங்கி வளவர்கோன் பள்ளத்திற் பாளையம் போட்டிருந்தான். இப்படி இருக்குங்காலத்தில் அவன் ஒருநாள் பரிசனங்களோடு சுவாமிதரிசனஞ் செய்யப் போனபொழுது அங்குச்சென்ற மாருதப்பிரவல்லியைக் கண்டு ஆச்சரியமுற்று அவள் பேரழகில் மயங்கி, இவளாரென்று விசாரணை செய்து இவளைத் தான் விவாகஞ்செய்ய வேண்டுமென்று தீர்மனித்து யோகசஙிதனைப் மீண்டுஞ் சந்நிதியடைந்து தரிசனஞ்செய்து தன்பதியை அடைந்து சமயம்வாயாது காத்துக்கொண்டிருந்தனன்.

மாருதப்பிரவல்லி தனக்குக் குதிரைமுகம் மாறின காரணத்தால் மாவிட்டபுரமெனப் பெயரிட்டுக் கந்தசுவாமி கோவில் கட்டுவிக்கும்பொருட்டு அதற்கு வேண்டிய சகல வஸ்துக்களும். விக்கிரகங்களும், பிராமணரும் அனுப்பி வைக்கும்படி பிதாவாகிய திசை உக்கிரசோழனுக்குச் சகல காரியங்களையும் வரைந்து ஓர் திருமுகம் அனுப்பினாள். அத்திருமுகம் பெற்றவுடனே மகாராசன் மிகவுஞ் சந்தோஷித்து வாசித்தளவில் ஆனந்த பரவசனாய்க் கண்ணீர் ததும்பி, மனம் நினைந்து நினைந்து நெக்குருகிக் கசிந்து, அக்கடவுளின் கிருபையை இடையறாது துதித்து நின்றனன் அவன் தன் புத்திரிக்கு ஆம் வேண்டிய சகல காரியங்களையுஞ் செய்து முடித்துக் கொண்டு, இலங்காபுரிக்கு ஒரு பிராமணனை அனுப்பவேண்டுமாகையால், தீக்ஷதரில் ஒருவரைத் தன்னிடம் அனுப்பிவைக்கும்படி சிவாலயத் தலைவனுக்குக் கட்டளையனுப்பினான். பிராமணர் தோணி ஏறுவதும் இலங்கையிற் குடியிருப்பதும் மனசுந்தோஷமாயிருக்க, அரசனிப்படிக் கட்டளையனுப்பியிருக்கிறானே நானிதற்கென்ன செய்வேனென்று பயந்து தில்லைச்சிவாலயத்திலே மூன்று நாட் பட்டினி கிடந்தான். அப்பொழுது, சொப்பனத்திலே கீரிமலைச் சாரலிலேயுள்ள புண்ணிய தீர்த்தத்தினாலுஞ் சிவலாயமகத்துவத்தினாலும், அப்பூமி மிகச்சிறந்ததென கருதாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாவமென்றதென்னே? பிராமணர் கணியமநிட்டை வழுவாதபடிக்கு மரக்கலங்களில் இராத் தங்காமற் பிரயாணஞ் செய்யலாம். காசியிற் பிராமணரும் அங்கேயிருக்கிறார்கள். அதுவுமன்றி நகுல முனிவனும் அங்கே இருக்கின்றான். அந்நகுலமுனி அத்தல விசேஷத்தைக் கண்டு அவ்விடமிருந்து தவம் பண்ணும்போதே, அங்கே போக யோசனைபண்ண வேண்டியதில்லை. யாதோராலோசனையுமின்றி அனுப்பலாமென்று உத்தரவு கிடைத்தது. அப்போது சிவாலயத்தலைவன் சந்தோஷமாய்ப் பெரிய மனத்துளாரென்னுந் தீக்ஷதரைச் சோழராசன் பக்கனுப்பினான். அவ்வரசன் சகல தளபாடங்களையும் விக்கிரகங்களையும் அவர் கையிற் கொடுத்தனுப்பினான். அவர் கைக்கொண்டு காங்கேயன் துறையில் வந்திறங்கினர். கந்தசுவாமி விக்கிரகம் வந்திறங்கின காரணத்தால் அந்தத்துறைக்குக் காங்கேயன் துறையெனப் பெயராயிற்று.

மாருதப்பிரவல்லி ஒருநாளிரவில் அந்தத் திருப்பணியைப்பற்றிய ஆலோசனையுடன் சப்ரமஞ்சத்திற் சாய்ந்து விழிப்பாயிருக்குஞ் சமயத்திலே, அர்த்தசாமத்திலே உக்கிரசிங்கமகாராசன் சேனைகளையும் பாளையக்காவல்களையுங் கடந்து பாளையத்தினுட் புகுந்து அவளையெடுத்துத் தன் பாளையத்திற்குக் கொண்டுபோய் விட்டான. பொழுதுவிடிந்தபின், அவளுடைய தாதிமாருந் தோழிமாருஞ் சேனைகளும் அவளைக்காணமல் மனக்கலக்கமுற்று எங்குந்தேடியுங் காணாது தவித்து நிற்கும் வேளையில், உக்கிரசிங்கமகாராசன் பாளையத்திலிருக்கிறாளென்றறிந்து, அங்கேபோய் நாங்களென்ன செய்யலாமென்று மனக்கலக்கத்தோடு பணிந்து வந்தனுதிகள் செய்து கூற, அரசன் அவளென் பட்டத்துத் தேவியானாள், நீங்களிந்தச் சுபசோபன செய்தியை இவளின் பிதாமாதாவுக்குப்போய் அறிவிடுங்களென்று வழிச்செலவுக்கு வேண்டிய திரவியங்களைக் கொடுத்தனுப்பி விட்டான். அதன்மேல் உக்கிரசிங்கன் கதிரமலைக்குப்போக யோசித்தபோது மாருதப்பிரவல்லி கந்தசுவாமிகோவிற் திருப்பணி நிறைவேற்றி, முதலாமுற்சவச் சிறப்புக்கண்டாலேயன்றி அவ்விடத்தைவிட்டுப் போகப் பிரியமில்லாமலிருந்ததினாற் பிரயாணத்தைநிறுத்தித் திருப்பணியை நிறைவேற்றி, ஆனி உத்திரத்திலன்றைக்குத் துவசாரோகணந்தொடங்கி உற்சவத்தை நிறைவேற்றிக்கொண்டு அதன்பின் மாருதப்பிரவல்லியுடனே அவ்விடம் விட்டுப்போனான். மாருதப்பிரவல்லி பாளையம்போட்டிருந்தவிடம் அதுமுதற் குமாரத்தி பள்ளமெனப் பெயராயிற்று. உக்கிரசிங்கமகாராசனும்,

மாருதப்பிரவல்லியுங் கதிரைமலையிற் சேர்ந்து விவாகச் சடங்கை நிறைவேற்றித் தெய்வேந்திரபோகத்தை யனுபவித்திருந்தார்கள். தில்லையிற்பெண் எல்லை கடவாததாற் பெரியமனத்துளார் விவாகமில்லாதவராய் வந்திருந்தார். அவர் சாம்பசிவ ஐயரின் மகள் வாலாம்பிகையை விவாகஞ் செய்து அப்பெண்ணுக்குத் தில்லைநாயகவல்லியென்று பெயரை மாற்றிக் கந்தசுவாமி கோயிலின் தென்புறத்திலே, அக்கிரகாரத்திலிருந்து கொண்டு கோயிற் பூசை பண்ணிவந்தார். பிராமணக்குடும்பங்களிரண்டும் ஒரு குடும்பமாகி இருதிறக் கோயில்களுக்கும் ஒருவரே விசாரணைத் தலைவரானார். உக்கிரசிங்கராசன் சிலகாலத்தின்பின் செங்கடக நகரியை இராசதானியாக்கி அங்கிருந்து அரசாண்டு வருங்காலத்தில், மன்மதரூபமுஞ் சர்வராச லட்சணமுடையவனாய்ச் சிங்கவாகுவென்னொரு குமாரனும், அவனுடனொரு பெண்ணும் பிறந்தார்கள்: அவ்விருவருக்கும் நரசிங்கராசனென்றுஞ். செண்பகாவதியென்றும் பெயரிட்டு இருவருக்கும் விவாகத்தையுஞ் செய்து அவ்வாலசிங்கராசனைச் செயதுங்க வரராச பட்டத்துடன் முடியுஞ்சூட்டி அரசாள வைத்துச் சிலகாலத்தில் உக்கிரசிங்கராசன் மரணமடைந்தான். செயதுங்க வரராசன் அரசாட்சியை நடத்தினன்.

அக்காலத்தில் இரண்டு கண்ணுங் குருடனாகிய கவி வீரராகவனென்பவன், யாழ்ப்பாண வாலசிங்க மகாராசனை பேரிற் பிரபந்தங்களியற்றிச் செங்கடக நகரிக்குப்போய் ராச சமூகத்தில் யாழ் வாசித்துப் பாடி வருங்காலத்தில், அரசன் மிகச்சந்தோஷப்பட்டு இலங்கையின் வடதிசையிலுள்ள மணற்றிடல் என்னும் இந்நாட்டை அவனுக்கு உபகாரமாகக் கொடுத்தான். அவனுபகாரம் பெற்ற இந்நாட்டுக்கு யாழ்ப்பாணமெனப் பெயரிட்டு இவ்விடம் வந்து சேர்ந்து வடதிசையிலிருந்து சில தமிழ்க்குடிகளை அழைப்பித்து அக்காலத்திற் சிங்களவரையும் மற்றும் பிறரையும் அரசாளக் கருதித் தமிழ்க் குடிகளையும் அங்கிருந்த சிங்களவருடன் குடியேற்றிச் சிலகாலம் அரசாட்சி செய்து வயோதிகனாயிறந்தான். அப்போது யாழ்ப்பாணஞ் சிலகாலம் அரசனில்லாது தளம்பிக் கொண்டிருக்கையிற் சிங்களவரைத் தமிழ்க்குடிகள் மிகவும் வருத்தினதினல் அவர்கள் சகிக்க முடியாது தங்கள் நாட்டுக்குப் போய் விட்டார்கள்.

இப்படி இருக்குங்காலத்திற் பொன்பற்றியூர் வேளாளனாகிய பாண்டிமளவனென்னும் பிரபு மதுரைக்குப்



போய் அங்குநின்று புறப்பட்டுச் சோழநாட்டிற்குப் போய்ச் சிலகாலமிருந்து இராச வுத்தியோகத்திகேற்ற கல்விகற்றுக் கொண்டிருந்த திசையுக்கிரசோழன் மகன் சிங்ககேதுவுக்கு மருமகனும், மேற் கூறிய மாருதப்பிரவல்லிக்கு மகன் முறையுஞ், சூரியவமிசத்தவனுமாகிய சிங்கையாரியனென்னும் இராச குமாரனைக் கண்டு யாழ்ப்பாணத்தின் நிலைபரத்தை அறிவித்து இந்நாட்டை அரசு செய்யும்படி வரவேண்டுமென்று வேண்டிக் கொள்ளச் சிங்கையாரியன் மறுக்காது உடன்பட்டுக் கல்வியறிவிலும் புத்தி விவேகத்திலு மெவர்களும் வியந்து கொள்ளத்தக்க உத்தண்ட வீரசிகாமணியாகிய புவனேகவாகு என்னும் மந்திரியையுங் காசியிலிருந்துவந்த வேதியர் குலோத்துங்கனாகிய கங்காதரக்குருக்களையுங் கூட்டிக்கொண்டு மற்றும் பரிவாரங்களுடன் பிரயாணப்பட்டுப் பாண்டிய இராசன் வழிவிட்டனுப்ப, யாழ்ப்பாணத்தில் வந்திறங்கி, நல்லூரிலே அரசிருக்கை ஸ்தாபிக்கக்கருதிச், சோதிடர் சொல்லிய நன்முகூர்த்தத்திலத் திபாரம்போட்டு, நான்கு மதிலுமெழுப்பி வாசலுமொழுங்காக விடுவித்து, மாடமாளிகைகளையுங்கூடகோபுரங்களையும்பூங்காவையும், பூங்காவன நடுவே ஸ்நான மண்டபமும் முப்புடைக்கூபமுமுண்டாக்கி அக்கூபத்தில் யமுனை நதித் தீர்த்தமுமழைப்பித்துக் கலந்துவிடச்செய்து நீதி மண்டபம், யானைப்பந்தி, குதிரைப்பந்தி, சேனைவீரரிருப்பிடம் முதலியவனைத்தையுங் கட்டுவித்துத் தன்னுடன் வந்த கங்காதரக் குருக்களும் அவர் பத்தினியாகிய அன்னபூரணியம்மாளும் வாசஞ் செய்தற்கு அக்கிரகாரமுமுண்டாக்கிக், கீழ்த்திசைக்குப் பாதுகாப்பாக வெய்யிலுவந்த பிள்ளையார் கோவிலையும், மேற்றிசைக்கு வீரமாகாளியம்மன் கோவிலையுந், தென்றிசைக்குக் கைலைவிநாயகர் கோவிலையும், வடதிசைக்குச் சட்டநாதீசுவரன் கோவில் தையல் நாயகியம்மன் கோவில், சாலைவிநாயகர் கோவில்களையுங் கட்டுவித்துத் தானுந் தனது திலகவதியாரென்னும் பத்தினியுடன் கிருகப்பிரவேசஞ் செய்து, ஐம்புலத் தறனொழுக்கி, ஏனைமூவகை ஆச்சிரமிகட்கும் நற்றுணையாக வாழ்ந்திருந்தான்.

சிங்கையாரிய மகாராசன், ஒருநாட் புவனேகவாகுவுடனலோசித்துத் தமிழ்நாட்டரசருக்குத் திருமுகமெழுதித் தமிழ்க்குடிகளை அழைப்பிக்க, அவர்களுள் ஐந்து குடிமைகளுடன் வந்த பொன்பற்றியூர் வேளாளன் பாண்டிமளவனையும் அவன் தம்பியையும், மைத்துனனாகிய சண்பகமளவனையுந் தம்பியையுந் திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும், காவிரியூர்ப் புரவலாதி தேவனின் மூத்த குமாரனாகிய நரசிங்கதேவனை மயிலிட்டியிலும், வாவிநகர் வேளாளன் சண்பகமாப்பாணனையும் அவன் ஞாதியாகிய சந்திரசேகரமாப்பாணனையுங் கனகராயனென்னுஞ் செட்டியையுந் தெல்லிப்பழையிலுமிருத்தினான். கோவலூர் பேராயிர முடையானென்னும் வேளாளனை இணுவிலி லிருத்த, அவன் அவ்வூர் திருந்தப்படாததினால் அதை விட்டு மேலைக்கிராமத்திற் போயிருந்தான். இராசமுத்திரையும் வரிசைகளும் பெற்ற கச்சூர் வேளாளன் நீலகண்டனையும் அவன் தம்பிமார் நால்வரையும் பச்சிலைப் பள்ளியிலும், சிகரமாநகர் வேளாளன் கனகமளவனையுந் தம்பிமார் நால்வரையும் புலோலியிலும், கூபகநாட்டு வேளாளர் கூபகாரேந்திரன், புண்ணியபூபாலன் என்னுமிருவரைத் தொல்புரத்திலும், புல்லூர் வேளாளன் தேவராயேந்திரனைக் கோயிலாக்கண்டியிலும், உயர்குல வேளாளர் மரபினனாகிய தொண்டைமண்டலத்து டன்னாடுகொண்ட முதலியென்பவனை இருபாலையிலும், செய்யூர் இருமரபுதுய்ய தனிநாயகனென்னும் வேளாளனை நெடுந்தீவிலும், காஞ்சிபுரம் பல்லவனென்னும் பிரபுவை இரண்டு துணைப் பிரபுக்களுடன் வெளிநாடென்னும் பல்லவராயர் கட்டிலுமிருத்தினான்.

சிங்கையாரியன் இப்படியே அந்தப் பிரபுக்களை அவரவரடிமைகள் குடிமைகளுடன் அங்கங்கிருத்திய பின். வல்லிமாதாக்கனென்னும் பராக்கிரமசூரனை மேல்பற்றுக்கும், செண்பகமாதாக்கனென்னுஞ் சூரவீரியனைக் கீழ்பற்றுக்கும், இயாணமாதாக்கனென்னும் விசயபராக்கிரமனைத் தென்பற்றிற்கும் அதிகாரிகளாக்கி, உத்தண்டவீரசிகாமணியாகிய வீரசிங்கனென்பவனைச் சேனாதிபதியாக்கி ஓர் சுபதினத்திலே நல்ல முகூர்த்தமிட்டு மகுடாபிஷேகம் பெற்று நகரில் வலம் வந்து, சிங்காசனமேற்றிப் பூலோக தெய்வேந்திரனாகி அரசாண்டான். இவ்வரசனுக்கு ஒருகை கூழங்கையாயிருந்ததினால் அவனைக் கூழங்கையாரியனென்றும் விசயகூழங்கைச் சக்கரவர்த்தியென்றுஞ் சொல்வார்கள். சிங்கையாரிய மகாராசன் இப்படியே அரசாட்சியைக் கைப்பற்றி நடத்தி வருகையிற புறமதில் வேலையையுங் கந்தசாமி கோவிலையுஞ் சாலிவாகன சகாப்தம் ௮௭௦-ம் வருஷத்தில், புவனேகவாகு மந்திரி நிறைவேற்றினான்.

சிங்கையாரிய மகாராசனும் மந்திரியுங் கீரிமலைக்குப் போய்த் தீர்த்தமாடிச் சிவாலய தரிசனஞ்செய்து அவ்



வாலய விசாரணையையும் அரசாட்சிக்குள்ளாக்கிக் கொண்டு, கந்தசுவாமி கோவிலில் வந்து பெரியமனத்துளார் குமாரன் சிதம்பர தீக்ஷதரின் மகனாகிய சின்னமனத்துளார் விருந்திட உண்டு, இளைப்பாறினார்கள். அவ்விருந்து மிகவுமுசிதமாயிருந்ததாற், புவனேகவாகு விருந்திலே பரிமாறிய, ஒவ்வொரு பதார்த்தங்களுக்கும் ஒவ்வொரு பாட்டுச் சொன்னான். அவற்றுட் சில கவி வருமாறு:—

## வெண்பா.

இன்னமுதம்விண்டுவிண்ணோர்கீந்தசெயலிதுவாம்
பன்னவனுந்தொக்கவருநினியு — நன்னருண
அன்னமளித்திந்நாளிவ்வாதரவுதந்துநின்ற
சின்னமனத்தான்செயல்.

சின்னமனத்தான்செயும்விருந்திற்சாற்றுருசி
அன்னதனைவிண்ணோரறிந்திருந்தால் – முன்னகூவாய்
வெற்பதனைக்காவியுய்த்துவேலைகடைந்தேயுலைத
லற்பமெனத்தள்ளுவரேயாம்.

இப்படியே பாட்டுக்களைப் பாடிக் கோவிலைப்பற்றிய ஒழுங்குகள் பண்ணிக்கொண்டு திரும்பினார்கள். காரியங் களிது விதமாய் நடந்து வருகையில் ஒருநாளிரவு அரசன் சப்ரமஞ்சத்தில் நித்திரை செய்யும்பொழுது பரமேஸ்வரமூர்த்தி பார்வதி சமேதராய் எழுந்தருளிவந்துகனவிலே தரிசனையாகி உத்தரவு கொடுத்தபிரகாரம், கைலைவிநாயகர் கோவிலின் பக்கத்திலே கைலாயநாதர் கோவிலையும், கைலாயநாயகியம்மன் கோவிலையும், எவற்றினும் விசேஷமுறக் கட்டுவித்து மூன்று சபைகளையும், பரிவார தேவர்களிருப்பிடங்களையும், உக்கிராணசாலை, யாகசாலை அக்கிரகாரமடம், தேரோடும் வீதி, அன்னசத்திரம், சுற்றுமதிற் கோபுரங்கள் இவைகளெல்லாவற்றையும் இயற்றுவித்துப் பாண்டிய இராசர்களை முதற்பாளையத் தலைவராயிருத்தி, இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதிக்குப் பாசுரமனுப்பிக் கேதாரத்திலே மன்மதன்பூசித்த ஆதாரலிங்கத்தை அழைப்பித்து வைத்துப் பாண்டியராசனைக் கொண்டு பிரதிஷ்டை செய்வித்துத், தன்னுடன் வந்த கங்காதரக்குருக்களைப் பூசைக்கேற்படுத்திக், கைலாயநாதர் திருவடிகளையே தியானித்துக்கொண்டு நல்லூர்க் கைலையில் நெடுங்காலம் அரசாண்டு வயோதிகனானபின், தன் மகன் குலசேகர சிங்கையாரியனுக்கு முடிசூட்டி வைத்துச் சில காலத்திற் சிவபதமடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலசேகர சிங்கையாரியன் அரசாட்சி முறைகளைத் திருத்திக் குடிகள் பிரியப்படத் தக்கதாய் நடந்து சமாதான அரசாட்சி செய்து தன் மகன்குலோத்துங்க சிங்கையாரியனுக்கு அரசாட்சியை ஒப்பித்துச் சிலகாலம் நோயினால் வருந்தித் தேகவியோகமானான்.

குலோத்துங்கசிங்கையாரியன் வயல்நிலங்களைத் திருத்துவித்து வருமானங்களை அதிகரிக்கச் செய்து குடிகள் சந்தோஷங் கொள்ளத் தக்கதாய்ச் சமாதான அரசாட்சி செலுத்தித் தன் மகன் விக்கிரம சிங்கையாரியனுக்கு முடி சூட்டிப் பரபதமடைந்தான்.

இவன் காலத்திலே, சிங்களவருக்குந் தமிழருக்குஞ் சமயாசாரங்களைப் பற்றிப் பெருங்கலசம் உண்டுபட்டதினாற் சிங்களவர் தமிழரைக் காயப்படுத்தியும் இரண்டு பேரைக் கொலை செய்தும் முரட்டுத்தனங் காட்டி நின்றதையறிந்த விக்கிரம சிங்கையாரியன் அவர்களைப் பிடிப்பித்து விசாரணை செய்து, அக்கலகத்துக்குத் தலைவனாய் நின்ற புஞ்சிவண்டா வென்பவனையும், அவனைச் சேர்ந்த அறுபத்தேழு சிங்களவரையுங் கொலை செய்து பின்னுஞ் சிலரைச் சிறைச்சாலையை யடைவித்தான் அதன் பின் கலகமடங்கிச் சிலசிங்களக் குடிகளொளித்து இந்நாட்டை விட்டுப் புறப்படவே, அரசன் தமிழர்மேற் பற்றுள்ளவனாகவும், சிங்களவர்மேற் பற்றில்லாதவனாகவு மிருந்தான்.

இவனுக்குப் பின் இவன் மகன் வரோதய சிங்கையாரியன் அரசாட்சியை ஒப்புக்கொண்டு மார்க்க வழிபாடுகளைக் குறித்துச் சில கட்டளைகளை ஏற்படுத்தி இருதிறக் குடிகளையும் அரசாண்டு தன்குமாரன் மார்த்தாண்ட சிங்கையாரியனுக்குப் பட்டத்தைக் கொடுத்துப் பரகதியடைந்தான். இவ்வரசன் கல்வியும், வேளாண்மையும் விருத்தியாகத்தக்க முயற்சிகளைச் செய்து, வன்னியர்களால் வந்த கலகங்களைச் சமாதானப் படுத்தித் தயாள குணமுள்ளவனாய்க் குடிகளைத் தாய்போலக் காப்பாற்றி அரசாண்டு வருங்காலத்திற் சுகவீனத்தால் மரணமடைந்தான். இது செய்தியைக் கேட்ட மாத்திரத்தில், துக்கசாகரத்தில் அமிழ்ந்திக் கண்ணீர்விட்டுப் பதறாதார் யாருமில்லை. இருதிறத்துக் குடிகளும் நினைந்து நினைந்து தடுமாறிக் கவிழ்ந்தனர்.



அவன் பின் அவன் மகன் குணபூஷண சிங்கையாரியன் முடிசூடி அரசியற்றி வந்தான். இவன் பிதாவிலும் அதிக தயாள குணமுள்ளவனாய்க் குடிகளைப் பாரபட்சமின்றி அரசாண்டு, கல்வி செல்வம் வர்த்தகம் முதலிய யாவற்றையும் விருத்தி செய்து பூரணாயுளுடையனாகித் தன் குமாரன் வீரோதய சிங்கையாரியனுக்குச் சிங்காசனத்தை ஒப்புவித்துச் சிலகாலத்தில் தேகவியோகமடைந்தான்.

இவன் காலத்திற் சிங்களக் குடிகளாற் கலகமுண்டாக அக்கலகங்கள் வன்னியராற் றூண்டிவிடப்பட்டதென்றறிந்து வன்னியர்கள்மேற் படையெடுத்துப்போய், ஏழு வன்னியர்களின் கிருகங்களைக் கொள்ளையடித்து, அவ்வன்னியர்கள் ஒருபோதும் அவ்வித எண்ணங்கொள்ளாதபடி தண்டித்துத் திரும்பினான். அவன் திரும்பியவுடன் சிங்களக் கலகக்காரர் அவன் காலடியில் விழுந்து, தங்கள் குற்றங்களைப் பொறுத்தருளல் வேண்டுமென்று வணங்கி நிற்க; ஒருவாறு சந்தோஷித்து அக்குற்றங்களை மன்னித்து நன்முகங்காட்டி வேண்டிய புத்திமதிகளை ஊட்டினன்.

அக்காலத்தில் மதுரையிலே, சந்திரசேகர பாண்டியனுடன் சத்துருக்கள் எதிர்த்து யுத்தஞ்செய்து இராச்சியத்தைப் பிடித்துக்கொள்ளப் பாண்டியன் ஒளித்து யாழ்ப்பாணத்துக்கு ஓடிவந்து வீரோதய சிங்கையாரியனென்னுமரசனிடம் அடைக்கலம் புகுந்தான். அப்பொழுது வீரோதய சிங்கையாரியன் பாண்டியன் கீழ்ப் பாளையக்காரராயிருந்த சேதுபதி முதலான வீரர்களோடுந் தன் சேனைத் திரள்களோடும் மதுரையிற் சென்று போராடிச் சத்துருக்களைத் துரத்திப் பாண்டியராசனின் அரசாட்சியை நிலைக்கச்செய்து நன்பதி அடைந்தான்.

இவன், தான் மறுபடியும் வன்னியரின் கிருகங்களைக் கொள்ளையாடவர இருக்கிறானென்று ஒரு பொய்க்கதையைக் கட்ட, வன்னியர்கள் பயந்து கண்டி இராசனிடம் போய்த் தங்களுக்கு உதவி செய்யும்படி கேட்க, அதற்கு அவன், யாழ்ப்பாணம் என் முன்னோர் பரிசாகக் கொடுத்த இராச்சியமாயிருப்பதால் அதற்கு விரோதமாய்ப் படையெடுத்து என் குலப் பிதாக்களின் பெயருக்கு அவகீர்த்தி வரச் செய்யமாட்டேனென்று மறுத்துச் சொன்னதினால், அவ்வேழு வன்னியர்களுந் தங்களுக்குள்ள திரவியங்களிற் சில பாகங்களைக்கொண்டு வந்து வீரோதய சிங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரியனைக்கண்டு நன்முகம் பெற்றுத் திரும்பிப் போய்ப் பயமுற்றிருந்தார்கள். வீரோதய சிங்கையாரியன் போசனஞ் செய்து அன்றிரவிற்றானே சப்ரமஞ்சத்தில் நித்திரை செய்கையிலே, சடுதியாய் இளவயதில் மரணித்தபடியால், அம்மரணத்தைக் குறித்துப் பலவாறாய்ப் பேசிக்கொண்டனர். அவன் குமாரன் செயவீர சிங்கையாரியன் சிறு வயதிலே முடிசூட்டப் பெற்று, அதி விவேகத்தோடு, சாமர்த்தியமாய்ச் சத்துரு பயமின்றி, இராச்சிய பரிபாலனஞ்செய்து குடிகளை இரட்சித்துத் தன் கீர்த்தியை விளக்கிக் கொண்டிருந்தான்.

அக்காலத்திற் கண்டி நாட்டை அரசாண்ட புவனேகவாகு என்பவன் முத்துச்சலாபத்தைக் குறித்து இவனுடன் பகைத்துத், தன் பராக்கிரம சவுரியத்தினால் யுத்தஞ்செய்து இவனதிராச்சியத்தைக் கவரவேண்டுமென்று துணிந்து நெருங்கினதினால் இவனும் அவனுடன் எதிர்த்து மண்மாரி மழைமாரி பொழிந்தாற் போல் யுத்தஞ்செய்து வெற்றி கொண்டு, மிதுன யாழ்க்கொடி தூக்கிச் சாலிவாகன சகாப்தம் கஉஅ0-ம் வருஷந் தொடங்கி கஉகூஉ-ம் வருஷம் வரையில் இலங்கை முழுதையும் ஒரு குடைக்கீழ் அரசாண்டு வந்தான். சகாப்தம் கஉகூஉ ம் வருஷத்திலே பராக்கிரமவாகு வென்பவன் பாண்டியராசனைப் பிணை வைத்துச் செயவீர சிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தைப் பெற்றுக் கொண்டான். இவனும் இவனிற் பின்வந்த வேற்றரசரு மொழுங்காய்த் திறைகொடுத்து வந்தார்கள். இவன் நெடுங்காலம் அரசாண்டு தன் மகன் குணவீர சிங்கையாரியனிடத்தில் இராச்சியத்தை ஒப்புவித்துப் பரலோக வாழ்வை யடைந்தான்.

கண்டி தேசத்தரசர் கொடுத்த திறையைக் கொடாததினாற் குணவீர சிங்கையாரியன் தன் சாமர்த்தியத்தினாற் சில பகுதிகளில், தமிழ்க்குடிகளையிருத்தி அரசாண்டு, மதுரையை அரசாண்ட நாயக்கர்களுக்குச் சில பல உதவியையுஞ் செய்தான். இவன், தன் பிதாவிலும் அதிவிசேஷமாய் யாவரும் மெச்சிக் கொள்ளத் தக்கதாய் அரசியற்றி, வயோதிகனாய்த் தனது மகன் கனகசூரிய சிங்கையாரியனுக்குப் பட்டத்தைச் சூட்டிச் சிவபதம் அடைந்தான்.

இவ்வரசன் சிங்களவருக்கு அதிக இடத்தைக் கொடுத்து மேன்மையாக நடத்தினதினால் அவர்கள் அகங்காரங் கொண்டு வன்னியர்களின் உதவி பெற்றுக் கலகஞ் செய்தபோது, கனகசூரிய சிங்கையாரியன் இரவிலே தன் மனைவி மக்களோடு வடதேசத்துக்கோடிப் போய்விட, விசயவாகுவென்னுஞ் சிங்களவன் இத்தமிழரின் நடையுடை பாவனைகளை முற்றாய் மாற்றித் தங்களைப்போலாக்க வேண்டுமென்னு மெண்ணத்தினால், இவர்களுக்கெல்லாந் தானே அரசனெனத் தலைப்பட்டுப் பதினேழு வருஷகால மரசியற்றியுங் கீழமையாதிருந்தார்கள்.



கனகசூரிய சிங்கையாரியன் தன் குமாரராகிய பரராசசேகரனையும், செகராசசேகரனையுந் திருக்கோவலூரில் இராச குடும்பத்தவர்கள்பாற் கல்விகற்க வைத்து, யாத்திரா தரிசனஞ் செய்யும்படி மனைவியுடன் காசிபரியந்தமுள்ள திருத்தலங்கள் தோறும் போய்த் திரும்பிக் கோகன்ன சிவாலயத்திற் சென்று, சுவாமி தரிசனஞ் செய்து, அங்குச் சில வருடங்களாய்ச் சிவராத்திரி விரதமனுட்டித்து வருங்காலத்தில், ஒருநாள் சுவாமி கனவிலே தரிசனமாகிச் சொல்லியவண்ணம் மதுரைக்குப் போக நினைத்து விரதோத்தியாபனக் கிரியைகளைச் செய்து முடித்துக் கொண்டு, திருக்கோவலூருக்குப் போய், அங்கே தன் பிள்ளைகள் வளர்ந்து, போர்ச் சாமர்த்தியத்திலுங்கல்விப்பயிற்சியிலுஞ் சரீர வழகிலும்அதிகரித்திருப்பக்கண்டு, அளவற்ற சந்தோஷமுடையவனானான். பிதாவைக் கண்டபோதே பிள்ளைகளின் முகங்கள் சூரியனைக் கண்ட செந்தாமரைப் புஷ்பங்கள் போலாயின. பிள்ளைகளிருவரும் சத்துருவைச் செயிக்கவும், இராச்சியத்தை மீட்டுக் கொள்ளவுஞ் செய்த பிரயத்தனங்களைக் கண்ட பிதா மிகுந்த சந்தோஷத்தோடு முத்தமிட்டு அங்குள்ள இராச குடும்பத்தாருக்குச் செய்ய வேண்டியவைகளைச் செய்து உத்தரவு பெற்றுக்கொண்டு பிள்ளைகளையும் மனைவியையுங் கொண்டு மதுரைக்குப் போய்ச் சேர்ந்தான். அங்குச் சென்றவுடனே அத்தேசத்தைப் பகுதி பகுதியாக ஆண்ட சிற்றரசர்களெல்லோருந் தங்கள் சேனைகளையும் படைக்கலங்களையுங் கொடுக்கத், தத்துவம் பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணம் வந்து. கோட்டைக்குள் மேற்கு வாயில் வழியாய் நுழைந்தான்

விசயவாகு காத்திராத வேளையிற் கனகசூரிய சிங்கையாரியன் நுழைந்த போதிலும், அவன் சடுதியாய்ச் சேனைகளைச் சேர்த்துக் கொண்டு அஞ்சா நெஞ்சனாய் அணி அணியாய் வகுத்து நிற்கச், செகராசசேகரனும் பரராசசேகரனும் விசயவாகுவின் துணிவையும் அவன் செய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் வீரத்தையுங் கண்டு வாட்படையுடனே போர்முனையிற் சிங்கம்போலப் பாய்ந்து சேனைகளையும் அவனையும் வாளுக்கிரையாக்கினார்கள். அதன் பின் பரராசசேகரன் தன்பிதா அரசியற்றவுந், தான் தேச விசாரணை செய்யவும் முயன்று, விசயவாகுவின் கலக்கத்துக்குடன்பட்டு நின்ற சிங்களவரில் அநேகரைப்பிடித்துக் கொலை செய்வித்தான். அனேக சிங்களக் குடிகள் தங்கள் குடும்பங்களோடு கண்டி நாட்டிற்குப்போய்க் குடியேறினபடியால், எஞ்சி நின்ற சிங்களக் குடிகள் தமிழருக்கு மிகவும் பயந்து நடந்தார்கள். பரராசசேகரன் சோழராசா வம்மிசத்திலுள்ள இராசலட்சுமியம்மாளென்னும் பெண்ணை விவாகஞ் செய்ததாற், பிதாவாகிய கனகசூரிய சிங்கையாரியன் அவனையே இராச்சிய பரிபாலனஞ் செய்யும்படி முடி சூட்டி வைத்துச் சில காலம் ஆறியிருந்து பரபதமடைந்தான்.

பரராசசேகரன் பொன்பற்றியூர் வேளாள மரபின் முடிதொட்ட வேளாளனென்னும் பாண்டிமளவன் குலத்திற் பிறந்த அரசகேசரியின் மகள் வள்ளியம்மையை இரண்டாம் மனைவியாகவும், மணவக்குடியிலிருந்து வந்த மங்கத்தம்மாளென்பவளை வைப்புப் பெண்ணாகவும்வைத்திருந்தான். பரராசசேகரனுக்குப் பட்டத்துத் தேவியாகிய இராசலட்சுமியம்மாள் சிங்கவாகு, பண்டாரம் என்னுமிரண்டு பிள்ளைகளையும், இரண்டாந் தேவியாகிய வள்ளியம்மையென்பவள் பரநிருபசிங்கம் முதலிய நாலு பிள்ளைகளையும், வைப்பு பெண்ணாகிய மங்கத்தம்மாளென்பவள் சங்கிலி என்னும் ஒரு குமாரனையும் பெற்று, இராசகுடும்பம் வர வர அதிகமாய்ப் பெருகப், பரராசசேகரன் அதி விவேகத்தோடு அரசாட்சி செலுத்தி வந்தான்.

செகராசசேகரன் கல்வியறிவிற் சிறந்தவனாய், வடநாட்டிலுந் தென்னாட்டிலுமிருந்து கொண்டு சகல சாஸ்திரங்களையும் பிரபலப்படுத்தும் பொருட்டு, வித்துவான்கள் பலரைச் சேர்த்துச் சங்கங்கூட்டிச் சில நூல்களைச் செய்வித்துத் தானுஞ் செகராசசேகரமென்னுஞ் சோதிட முதலிய பல நூல்களையுஞ் செய்தான். பரநிருபசிங்கத்தின் மைத்துனனும், பரராசசேகரன் மருமகனுமாகிய அரசகேசரியென்பவன் இரகுவமிசமென்னு நூலை வடமொழியிலிருந்து புராண நடையாகப் பாடிப் புண்ணிய பூமியாகிய திருவாரூரிற் சென்று, அங்குள்ள கல்விமான்கள் சமூகத்தில் அரங்கேற்றிப் பெருங்கீர்த்தியடைந்தான். இவ்வாறே யாழ்ப்பாணங் கல்வியறிவிற் சிறந்து



விளங்கிற்று. பரராசசேகரனுந் தம்பியுஞ் சிங்கையாரியப் பட்டத்தைச் சிங்கையெனச் சுருக்கித் தங்கள் பெயர்களின் முன் வைத்துச், சிங்கைப் பரராசசேகரன், சிங்கைச் செகராசசேகரன் என்றெழுதி வந்தார்கள். செகராசசேகரன், பாண்டிநாடு திருவாவடுதுறை முதலிய ஆதீனங்களிலுள்ள சாஸ்திரங்களனைத்தையும் அழைப்பித்து எழுதுவிக்கும் பொருட்டு, அடிக்கடி சேதுவுக்குப் போக்குவரவு செய்துகொண்டிருந்தான். இராசகுமாரர் கல்வியிலும் படைப் பயிற்சியிலும் தேக வளர்ச்சியிலும் நாளுக்கு நாள் அதிகரித்து உயர்குணம் முதலிய யாவற்றிலுஞ் சிறப்புற்றிருந்தார்கள். அவர்களுக்குட் சங்கிலி என்பவன் கபட சிந்தனையுந், துர்க்குணமுங், கடு விவேகமுந், துஷ்ட நடையுமுள்ளவனாயிருந்தான்.

இப்படியிருக்கும் நாளில் ஒருநாள், அகத்திய முனிவரின் பௌத்திரருஞ், சித்த முனிவரின் புத்திரருமாகிய சுபதிட்ட முனிவர் பரராசசேகர மகாராசனைக் காணும்படி வர, அரசன் அவ்விருஷிக்குத் தான் செய்ய வேண்டிய ஆசாரவுபசாரங்கள் அனைத்தையுஞ் செய்து ஆசனத்திருத்தித், தேவரீர் என் பிதாவுக்கு வருங்கால சம்பவங்களை அறிவித்திருந்தும் அவைகள் அடியேனுக்குப் புலப்படாமையால், அவைகளையும்இனிமேல் லிவ்வரசாட்சிக்கு வருஞ் சம்பவங்களையுந் தெரிவிக்க வேண்டுமென்று அஞ்சலி செய்து நின்றான். சுபதிட்ட முனிவர் அரசனை நோக்கி ''உன் அரசாட்சி இன்னுஞ் சிலகாலஞ் சிறப்பாய் நடந்துவரும், முன் முடிசூட்டிய முகூர்த்தந் தப்பிப் போனதினால் உன்னிற்பின் முடியைச் சூட்டுதற்குப் பிள்ளைகளில்லை'' என்று சொல்ல, அரசன் பட்டத்துத் தேவி பெற்ற பிள்ளைகளும் இரண்டாந்தேவி பெற்ற பிள்ளைகளும் இருக்கப் பிள்ளையில்லையென்றதென்னையென, ஓ அரசனே இத்தனை பிள்ளையுண்டென்பது மெய்யே! அவர்களுள் பட்டத்துத்தேவி பெற்ற மூத்தகுமாரன் விஷகுடியினாலிறப்பன். இளைய குமாரன் வாளினால் வெட்டுண்டிறப்பன். உன் இரண்டாந் தேவியின் மூத்த குமாரன் அரசியற்றி வருங்காலத்தில், உன் வைப்புப் பெண்ணின் மகன் அவனை வாய்ப்பேச்சினால் மயக்கி, அரசாட்சியைக் கவர்ந்து கொண்டு கொடுங்கோலரசு செலுத்துவதைக் குடிகள் தாங்க மாட்டாது பொருமை கொள்வதினாலும், இரண்டாந் தேவியின் குமாரனை வெறுத்துப் பகை கொள்வதினாலும், இராச்சியம் அந்நியர் கைக்கீழாகுமென்றார். அரசன் இராச்சியம் எப்பொழுது மீளுமென்று கேட்க; இராச்சியம் முதற் பறங்கிக்காரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையிலகப்படும்; அவர்கள், சிவாலயங்களை இடித்துத் தள்ளிக் கிறிஸ்து சமயத்தைப் பரப்பும்படி குடிகளை நெருக்கி நாற்பது வருஷகாலம் அரசாண்டபின், உலாந்தெஸ் மன்னர் பறங்கிக்காரரை உபாயமாகப் பிடித்துக், கத்தோலிக்கு வேதத்தைப் பரப்பும்படி தன் சமயக் கோவில்களைக் கட்டுவித்துச் சமய காரியங்களில் நெருக்கிடைபண்ணி அநேக வரிகளை வைத்துக் குடிகளை வருத்தி நூற்றிருபது வருடத்துக்கு மேற்பட அரசாட்சி செய்வார். அப்பால் இங்கிலீஸ் மன்னர்கள் அவரிடத்தில் இராச்சியத்தைப் பெற்றுச் சமய காரியங்களிற் பலவந்தஞ்செய்யாமல் எவர்களுந் தங்களிஷ்டப்படி சிவாலயச் சேவை முதலிய யாவற்றையுஞ் செய்து முடிக்கத் தடைசெய்யாது நீதியாய் முற்கூற்றில் அரசாண்டு பிற்கூற்றிற் சில விஷயங்களில் அநீதியாய் அரசு செலுத்துவரென்றும், தம் அரசாட்சியை இழந்து போகு முன்னமே சிங்கையாரிய மகாராசன் கட்டுவித்த கோவிற் றிருப்பணிகளும், விசயராசன் செய்த திருப்பணிகளும் நிறைவேற்றமாகுமென்றும், அவ்வாலயங்களிலே அனேகர் புகழை நாட்டிக் கொள்வதற்காகக் கட்டத் தொடங்கி நிலையந் தவறிப்போவர்களென்றும், அவ்வாலயங்களில் வடமதில் வாயிற் பாதுகாப்பாய் நின்ற சிவாலயமொன்று மாத்திரம் சிவகடாட்சம் பெற்ற ஒருவனால் முதல் முதல் நிறைவேறுமென்றும், மற்ற ஆலயங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் நிறைவேற்றமாகுமென்றும், எல்லா ஆலயங்களிலும் அதிவிசேஷமான கைலாயநாதர் கோவிலும், கைலைநாயகியம்மன் கோவிலும், கைலைவிநாயகர் கோவிலும், முன்னிருந்தபடி கட்டியெழுப்புதற்குக் கைலைநாதராற் பூரண கடாட்சம் பெற்றவர்களே முயல்வார்களென்றும், அப்பொழுது அவர்களிடத்தில் வெளிப்பட்டு வரும் வாலசிங்கமென்பவன் கையில் இலங்கை அரசாட்சி முழுவதையுமொப்பித்து விட்டுத்தங்கள் நாட்டுக்குப்போவார்களென்றும், கேதாபுரியை அரசாளும் பூலோகசிங்க சக்கிரவர்த்தியின் மகன் ஆரியசிங்க சக்கிரவர்த்தி கன்னியாகுமரி தொடங்கி இமயமலை பரியந்தமுள்ள ஐம்பத்தாறு தேசங்களையும்ஒரு குடைக்கீழ் அரசாளுவானென்றும் உன் சந்ததியாருக்குள் இனி ஒரு போதும் அரசாட்சி வருவதில்லையென்றுஞ் சொல்லிச் சுபதிட்டமுனி எழுந்து போனார்.

இப்படி உறுதி வாக்காக இருஷி சொன்னவைகளை நம்பியும் நம்பாமலுமிருக்கச் சிலகாலத்தில் மூத்த குமாரன் சடுதி மரணமடையத், தன் இளைய குமாரனாகிய பண்டாரமென்பவனுக்குப் பட்டஞ் சூட்டிவைத்துத்தான்



யாத்திரா தரிசனஞ் செய்யும்படி பரிவாரங்களுடனே கும்பகோணத்திற்குச் செல்ல, அங்குச் சோழதேசத்தரசன் பட்டத்துத் தேவியோடு வந்திருக்கக் கண்டு, சந்தோஷங் கொண்டாடிக் கொண்டிருந்தான். இராசாவின் மூத்த குமாரனைச் சங்கிலி நஞ்சூட்டிக் கொன்றானென்பது ஒருவருக்குந் தெரியாமற் போயிற்று. அங்குச் சங்கிலி செய்த குழப்பத்தினால் அவனையும் பரராசசேகரனையும் பரிவாரங்களையுஞ் சோழராசன் பிடித்துச் சிறையில் வைக்கச், சேனைகளுடன் பின்னாகப்போன பரநிருபசிங்கம் அதைக் கேள்விப்பட்டு அட்டகாசஞ் செய்து யுத்தஞ்செய்கையிற், சடுதி மரணமடையத்தக்க மூன்று காயங்கள் பட்டும் அதை கவனியாது வீராவேசங் கொண்டு போராடிச் சோழராசனைச் சிறையிலிட்டு அவன் சேனைகளைத் தன் வசப்படுத்திக் கொண்டு. தகப்பன் முதலிய சகலரையுஞ் சிறைச்சாலையினின்று நீக்கி மூன்று மாதம் அங்கிருந்து காயங்களையும் மாற்றினான். அப்பொழுது சோழராசன் தன் இராச்சியத்தைத் தான் திறை தந்து ஆளுகிறேனென்று கேட்டுக் கொள்ள அதற்கேற்ற பிணை வாங்கிக் கொண்டு இராச்சியத்தை ஒப்பித்துவிட்டு யாழ்ப்பாணத்திற்குத் திரும்பினான். யாழ்ப்பாணம் வந்தவுடன் பரராசசேகரன் பரநிருபசிங்கத்தை யழைத்துக் கன வரிசைகள் கொடுத்து, மிகவுங் கனப்படுத்திக் கல்லியங்காடு, அச்சுவேலி, சண்டிலிப்பாய், அராலி, உடுப்பிட்டி, மல்லாகம், கச்சாய் முதலிய ஏழு கிராமங்களையுஞ் சொந்தமாகச் செப்புத்தகட்டிற் பட்டயமெழுதிக் கொடுத்து, அரசாட்சியின் இரண்டாம் அதிகாரமுடையவனாகவு மாக்கினான். அது சங்கிலிக்கு மனவருத்தமாயிருந்தும் வெளிக்குக் காட்டாமலடக்கிக் கொண்டான்.

இப்படி இருக்குங் காலத்திற் கண்டி இராசன் மனைவிக்கிருந்த வயிற்றுவலி அங்குள்ள பண்டிதரால் நீக்க முடியாமை கண்டு அவ்வரசன் பரராசசேகரனுக்குப் பாசுரமனுப்பப், பரராசசேகரன் பரநிருபசிங்கத்தை நோக்கி உத்தரவு செய்யப் பரநிருபசிங்கம் போய், அவ்வியாதியை ஒரே ஔஷதத்தினால் மாற்றி வரவேண்டுமென்னும் பேராசையினால் தன் சாமர்த்தியத்தைக் காட்டி, அந்நோயை நீக்க அரசன் தான் செய்ய வேண்டிய உபசாரமனைத்தையுஞ் செய்து அனுப்பி வைத்தான்.

ஒரு நாள் பண்டாரமென்னும் இளவரசன் நந்தவனத்திற் சென்று வேட்டையாடி வருகையிற் சங்கிலி என்பவன் மறைவினின்று வாளினால் வெட்டிக் கொலைசெய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராச்சியந் தன்னுடையதென்று முன்னிற்கப். பரராசசேகரன் தன்னுயிரையுஞ் சிதைப்பானென்ற பயங்கரத்தினால் ஒன்றும் பேசாது மவுனமாயொதுங்கி விடப், பரநிருபசிங்கம் இவனுக்கு இராச்சியமெப்படிக் கிடைக்குமென்று சொல்லித் தன் பரிசனங்களோடு யுத்தத்திற்கு வெளிக்கிட்டான். அது கண்டு சங்கிலி பரநிருபசிங்கமிடத்திற்குப் போய்க் ''கேளும் அண்ணாவே'' நாங்களிருவருஞ் சகோதரர்களாகவும் சரிவந்த பங்குக்காரர்களாயுமிருந்து கொண்டு ஒருவரை ஒருவர் பகைத்துக் கொள்ளும் பட்சத்தில், வனனியர்கள் இராச்சியத்தைக்கவர்ந்து கொள்வார்களாகையால், இப்போதைக்கு நான இராசாவாகவும் நீர் மந்திரியாகவுமிருந்து, எங்கள் பிதாவினால் உமக்குக் கிடைத்த அதிகாரத்தை உமது மகன பரராசசிங்கத்துக்குக் கொடுத்து, வேறு ஒழுங்குகள் பண்ணும் வரையில் இராச்சிய வருமானங்களை இருவரும் பகுந்து கொண்டு, ஒத்திருந்தால் எவ்வளவோ காரியங்களெல்லாஞ் செய்து முடிக்கலாமேயெனறு சொல்லி வாய்ப் பேச்சினால் மயக்கப், பரநிருபசிங்கம் இசைந்து, மந்திரி உத்தியோகத்துக்கு ஏற்பட்டான்.

சில காலத்துக்குள் சங்கிலி சேனைகளைத் தன வசப்படுத்திக் கொண்டு பரநிருபசிங்கத்துக்குக் கொடுத்துவந்த வருமானப் பங்கையுந் தேசவதிகாரத் தலைமையையும் நிறுத்தி மந்திரி உத்தியோகத்திற்குச் சம்பளம் மாத்திரங் கொடுக்கத், தொடங்கப் பரநிருபசிங்கம் சோழராசனுக்குப்பாசுரமெழுதி இனறு முதலாகத் திறைகொடுக்க வேண்டாமென்று தடை செய்தான்.

அந்நாட்களிற் பறங்கிக்காரர் லியாபாரஞ் செய்வதற்கு வரத்தும் போக்காயிருக்கையில் அவர்கள் செய்த உபதேசத்தினாற் சில எளிய சனங்கள் அவர்கள் சமயத்திற் சேர்ந்திருக்கிறார்களென்பதைச் சங்கிலி இராசன கேள்விப்பட்டு, ஆண் பெண் குழந்தையெனறு பேதம் பாராமல் வெட்டுவித்ததுமன்றி அங்கிருந்த புத்தசமயக் கோவில்களையும் இடிப்பித்துச், சிங்களக் குடிகளையும் முழுதாகத் துரத்திவிட, அவர்கள் போய்க் கண்டி நாட்டிலும், வன்னிக் காடுகளினும் ஒதுங்கி விட்டார்கள். அதுமுதல் யாழ்ப்பாணத்திற் சிங்களவரிருந்ததில்லை. முன விசயவாகுவின கீழ்ப் போர்ச் சேவகராயிருந்த யாவகச் சேனையிலே கொலைக்குந் தண்டனைக்குந் தப்பியிருந்த சில யாவகக்குடிகள் சாவாங்கோட்டையிலுஞ், சாவகச்சேரியிலுமிருப்பக்கண்டு அவர்களையுந் துரத்தி விட்டான்.



அக்காலத்திற் பத்தொன்பது வன்னியர்கள் தென்னாட்டிலிருந்து மரக்கலமேறி வருகையில், நெடுந்தீவிற் கடலில் அமிழ்ந்திப் போக, வேறு மரக்கலங்களில் அதிக திரவியத்தோடு வந்திறங்கிய, அவர்கள் மனைவியருங் கரைப்பிட்டி வன்னியனும் அவன் மனைவி அம்மைச்சி நாச்சியாருங் கந்தரோடைக் குறிச்சியில் வீடு கட்டிக் கொண்டிருந்து, தங்கள் வன்னியர்கள் வரும்போது கூடிக் கொண்டு வன்னிநாட்டுக்குப் போகலாமென்றிருக்க அவ்வன்னியர்கள் நெடுங்காலமாய் வரக்காணாமையால், வன்னிச்சிகள் ஆங்காங்கே வீடுகள் கட்டிக்கொண்டு தங்கள் தலைவரின் வரவை எதிர்பார்த்து, வேலைக்காரிகளின் உதவி பெற்றிருந்தார்கள். அப்போ, கரைப்பிட்டி வன்னியன் தன் கீழ்ச் சேவகராயிருந்த அறுபது கத்திக்காரநம்பிகளுள், தலைநம்பியின் மகளைக் கற்பழித்ததினால், அவள் தகப்பன் மறுநாள் வன்னியன் தெய்வ வழிபாடு செய்து கொண்டு நிற்கையிற் கொலை செய்து விட, அவன் மனைவி அம்மைச்சி நாச்சியார் வயல் வெளியில் ஓடித்திரிந்து தான் எங்கே போகலாமென்று அறியாதவளாய், மயங்கித் தற்கொலை செய்திறந்தாள். நம்பி தலைவனும் இராச விசாரணைக்குள்ளாகிக் கொலையுண்டிறக்க, அவ்வன்னியன் கையிலிருந்த திரவியங்களெல்லாஞ் சங்கிலி இராசனுக்காயின. மற்ற நம்பிகள் சீவனத்துக்கு வழியில்லாததினாற் சாணாகக் கும்பமென்னும் அயற் கிராமத்திருந்த சாணாகருக்குப் பணிவிடைக்காரராகிப் பனை ஏறுந் தொழில் பயின்று, பின் அத்தொழிலைத் தங்கள் சொந்தமாக்கிக் கொண்டனர். இவர்கள் தங்கள் குலத்தை விட்டு நளுவினதால் ''அவர்களின் குலம்நளுவரென்றாய்'' இக்காலத்தில் நளவரென்றாயிற்று.

இராமநாதபுரத்திலிருந்து சில மறவர் வந்து, மறவன் புலவிற் குடியிருந்து, உள் நாடுகளிற் பெருங் களவு நடத்தினதினால் அவர்களிற் சிலரைச் சங்கிலி இராசன் பிடித்துக் கொலை செய்விக்க மிச்சமான குடிகள் பன்றியந்தாள் என்னுங் காட்டிற் போய்க் குடியிருந்தார்கள். அந்நாட்களில் வடமராட்சிப் பகுதிகளிலிருந்த குடிசனங்களுக்குள்ளே ஓர் பெருங் கலகமுண்டுபட அக்கலகத்தைச் சங்கிலி இசாசன் அவ்விடத்திற்குப் போய் அடக்கி வருகையில், இருடாலைஎல்லை சமீபித்தவுடனே வாத்தியத் தொனியை நிறுத்த, இராசன் நிறுத்தினதற்குக் காரண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்னென்று விசாரிக்க, இது பரநிருபசிங்கத்துக்குரிய இடமாயிருப்பதால் உத்தரவின்றித் தொனி செய்யப் பயந்து விட்டோமென்றார்கள். அதனாற் சங்கிலி இராசன் பரநிருபசிங்கத்துக்குரிய கள்ளியங்காடு முதலிய ஏழு கிராமங்களையுங் கவர்ந்து கொள்ள நினைத்துஞ் செப்புப் பட்டயம், முடி, செங்கோல் முதலியவை அவன் கையிலிருக்கத், தான் அதிகாரஞ் செய்து வந்தமையாலும், வேறு முடிதேடிச் சூட்டிக் கொண்டாற் கலகம் நேரிடுமென்பதனாலும் பயந்து விடுத்தனன்.

வன்னியன் அவ்வூராருடன் கொண்டாடித் திரிவதைச் சங்கிலி இராசனறிந்து தான் நிறுத்தி வைத்த வருமானப் பங்கைப் பரநிருபசிங்கத்துக்கும், கிராம அதிகாரத்தைப் பரராசசிங்கத்துக்குங் கொடுக்கச் சம்மதித்துச் சமாதானப்படுத்திக் கொண்டு, பரநிருபசிங்கத்துக்கும் மகனுக்குமுள்ள இராச நாமங்களை மாற்றி வேறு பட்டத்தைச் சூட்டி வைக்க வேண்டுமென்று ஆலோசித்து, வடதிசை வேளாளரின் முதலிப் பட்டத்தை அவர்கள் பெயரினிறுதியிற் சேர்த்துப் பரநிருபசிங்கமுதலி, பரராசசிங்கமுதலி எனத் தான் எழுதி வைத்துக் கொண்டதுமல்லாமல், ஒருநாட் பரராசசிங்கத்தை அழைத்து உன் பிதாவுக்கும் உனக்குஞ் சகலகிராமங்களும் மேலதிகாரங்களுங் கிடைத்திருக்கின்றது; உங்களிற் பின் உங்கள் சந்ததியாருக்குந் தலைமுறை தலைமுறையாக இவ்வதிகாரம் நிலையாக நிற்குமாகையால், உங்கள் சந்ததியாருக்கும் ஒரு பட்டஞ் சூட்டிவைக்க விரும்புகிறேனென்றான். அதென்னவென்று கேட்க, மடப்பம் = ஐந்நூறு கிராமத்திற்குத் தலைமை பெற்றது, அளித்தல் = காத்தல்; ஆகவே மடப்பத்தை அளிப்பது மடப்பளியென்பதாமென்றான் அதை பரராசசிங்கந் தன் பிதாவுக்கு அறிவிக்கப் பிதா அவன் எப்படி பிதற்றினாலும் பிதற்றட்டும்; அவரவரிருந்து அறியலாம் உன் அலுவலைப் பாரென்றான். அதன்பின் சங்கிலிஇராசன் சேனைகளையும், ஆயுதங்களையும் வர வர அதிகமாகச் சேர்த்துக்கொண்டிருக்கும் நிலவரத்தைப் பரராசசேகரன் கண்டு, தன்னிடத்திருந்த 'திரவியம்' முழுவதையும் யானைகளிலேற்றி, இராவிராவாய்ப் பிரயாணஞ் செய்து, வன்னி நாட்டையடைந்து, தங்கள் முன்னோர் திரவியஞ் சேமித்து வைத்த குகையிலே தானும் முடி செங்கோல் முதலிய யாவற்றையுஞ் சேமித்து உன்மத்த வைரவனைக் காவலாக வைத்துத் தன்மாளிகையில் வந்திருக்குங் காலத்தில், ஒருவரோடொருவர் வெளிக்குச் சந்தோஷமாயும்,



உள்ளெண்ணத்தில் ஒருவரையொருவர் சதிப்பவர்களாயும் இருந்தார்கள். சங்கிலியின் கொடுமை வர வர அதிகரித்தது.

மன்னாரிற் கிறீஸ்து சமயத்திற் சேர்ந்த சனங்களைச் சங்கிலி இராசன் வெட்டுவித்தபடியாற் சவரியானென்னும் பறங்கி, பறங்கிக்காரரை யாழ்ப்பாணத்திலூடாடப் பண்ணவுந், தன் சமயத்தைப் பரப்பவும் அவாவுள்ளவனாயிருக்கையிற், பரநிருபசிங்கமுஞ் சங்கிலியும் பகையாயிருப்பதை அறிந்து, எழுத்து மூலமாய்க் கொண்டாடிக் கொள்ள, அவன் இராச்சிய அதிகாரந் தனக்கு இனிமேல் ஒரு போதினும் வரமாட்டாதென்று கண்டு, இராச்சியத்தைப் பறித்து அந்நிய இராசனுக்குக் கொடுக்க எண்ணங் கொண்டிருந்தான். சங்கிலி இராசன் தன் மந்திரிமாருள் ஒருவனாகிய அப்பா என்பவன் மகள் மிகவுஞ் சவுந்தரியாயிருந்ததினால் அவள்பேரில் மோகங்கொண்டு கற்பழிக்கத் துணிய, அவளின் பிதா, பரநிருபசிங்கமிடத்தில் வந்து தன் மானத்தை காப்பாற்றித் தரவேண்டுமென்று அழ, அதற்குப் பரநிருபசிங்கம் பயப்படாதே, நான் காப்பாற்றித் தருவேனென்று திடஞ் சொல்லி உடனே ஒரு காகிதமெழுதி ஊராகாவற்றுறையில் காக்கைவன்னியன் வந்து இறங்கியிருக்கிறான் அவனிடத்திற் கொண்டுபோய்க் கொடுவென்று சொல்லக் கொண்டு போய்க் கொடுத்த மாத்திரத்தில் அவன் வாசித்துப் பார்த்துக் கொண்டு நீ உன் மகளைப் பரநிருபசிங்கம் வீட்டில் அடைக்கலமாக வைத்துவிட்டு உன் அலுவலைப் பார் நான் சற்றிடம்போய் வந்துஎல்லாம் பார்த்துக்கொள்ளுவேனென்று சொல்லிப், பரநிருபசிங்கத்துக்குப் பதிலோலையும் எழுதிக் கொடுத்தனுப்பி விட்டுத் தரங்கம்பாடிக்குப்போய்ப் பறங்கிக்காரரைக்கண்டு, யாழ்ப்பாணம் முதலிய இடங்களைப் பிடித்துத் தருவேன் வாருங்களென்று நம்பும்படி சத்தியம் பண்ணிக் கொடுக்கப், பறங்கிக்காரர் வியாபாரஞ் செய்பவர்களைப் போற் பண்ணைத்துறையில் வந்திறங்கிச் சங்கிலி இராசனிடத்திற்குப் போய்த் தங்களுக்கு யாழ்ப்பாணத்தில் வியாபாரஞ் செய்ய உத்தரவு தரவேண்டுமென்று கேட்கச் சங்கிலி இராசன் சம்மதியாது மறுக்கப், பரநிருபசிங்கமும் மந்திரிமாரும் ஒருமித்து நின்று இப்படிப்பட்ட வியாபாரம் இந்நாட்டுக்கு ஆவசியகந் தேவையென்று மேன்மேலுஞ் சொல்லச், சங்கிலி இராசன் ஒருவாறுஉடன்பட்டுப் பறங்கிக்காரரை நோக்கி, ''நீங்கள் பகற்காலத்திலன்றி இராக்காலத்தில் உள்ளூருக்குள் நில்லாமல் உங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் தோணிகளில் தங்கி வியாபாரஞ் செய்து கொள்ளுங்கள்'' என்று உத்தரவு கொடுக்கப் பெற்றதினால் அவர்கள் அவ்வாறு சிலகாலம் வியாபாரத்தை நடாத்தி, அப்பாற் சங்கிலி இராசனுக்கு விலையுயர்ந்த நவரத்தினங்களையும், பட்டுப் புடவைகளையும், வேறு சில நூதன சாமான்களையுங் கொடுத்து நன்முகம் பெற்றுக் கொண்டு, ''மகாராசனே'' நாங்கள்தோணிகளிலிருந்து சமயல், போசனம், நித்திரை முதலியவற்றைச் செய்வது மிக வருத்தமாகையாற் கடலோரத்தில் தங்கி இருக்கவும், வியாபாரப் பொருள்கள் வைத்துக் கொள்ளவும், ஒரு வீடு கட்டும் பொருட்டு உத்தரவு தந்துதவ வேண்டுமென்று கேட்கச், சங்கிலி இராசன் மனமிரக்கங் கொண்டு கடலோரத்தில் ஒரு சிறு வீடு கட்டிக் கொள்ளுங்களென்று உத்தரவு கொடுத்தான். அவ்வுத்தரவைச் சாட்டாகக் கொண்டு பறங்கிகள் மண்ணினால் ஒரு பெருங் கோட்டையைக்கட்டி, அதிலே சேனைகளையும், ஆயுதங்களையும் நிறைத்து வைத்திருந்தார்கள். அவ்விடம் பெருங் காடாயிருந்ததினால் மனிதர் போக்குவரவு மிகக் குறைவாயிருந்தது, அதினாற் சங்கிலி இராசனுக்கு அச்செய்திகள் ஒன்றுந் தெரியாமற் போயிற்று.

சில காலத்தின் பின் சங்கிலி இராசன் அந்நாட்டிற் சென்று வேட்டையாடி அங்குமிங்குமலைந்து வருகையிற் கோட்டை கொத்தளங்கள் கொடிகள் சேனைகள் அயுதங்கள் முதவிய யாவற்றுமிருப்பக் கண்டு, நீங்கள் இவ்வாறு செய்தற் பொருட்டு உத்தரவு கொடுத்த தாரென்றான். நீர்தானென்றார்கள். இவன் அதிக கோபங் கொண்டு, கோட்டை முதலியவற்றை இடித்துத் தள்ளக் கருதிப் பறங்கிகளோடு முரட்டுத் தனஞ் செய்தும், அவர்கள் இடங்கொடாது மனவலிமையோடு நின்றதினால் யுத்தமுண்டாக ஏதுவாயிற்று. அப்பொழுது யுத்தம் நடத்துதற்கு நல்லூரிலே வீரமாகாளியம்மன் கோவிலுக்கு முன்னையிருந்த வெளியைப் போர்க்களமாக நியமித்துக் கொண்டு, குறித்த நாளிலே பறங்கிகள் துப்பாக்கி முதலியவற்றோடு அணி அணியாகவும், தமிழர் வாள் முதலிய படைக்கலங்களோடு அணி அணியாகவும், நின்றுயுத்தஞ் செய்தார்கள். இருதிறத்துப்படை ஒழுங்கும் ஒன்றுக்கொன்று வித்தியாசமிருந்ததினாற் சரியான யுத்தம் நடக்கவில்லை. பறங்கிகள் ஒரு துப்பாக்கியை நீட்டி இலக்குப்பிடிக்க, மற்றொருவன் பற்றுவாய்க்கு நெருப்பு வைக்கச், சில முறைகளில் வெடி தீர்ந்து சனங்களைச் சேதப் படுத்தியும், சில முறைகளில் வெடி தீராதிருக்கத் தமிழர் வாள் முதலியவற்றால் அநேக



மற் பறங்கிச் சேனைகளை வெட்டியும், இளைத்துப் போகச் சங்கிலியும் அவனுக்குத் துணை வீரராயிருந்த நானூறு பராக்கிரமசாலிகளும் உள்ளணியாய்ப் பாய்ந்து கடும்போர் செய்ய, ஏழா நாட் போரிலே பறங்கிகள் இனி என்ன செய்வோம்; சங்கிலி இராசன் கையில் அகப்படுவதன்றி வேறு கதியில்லையென்று மனந்தளர்ந்து நிக்குஞ் சமயத்தில் தரங்கம்பாடியினின்று தங்களுக்குக் துணைச் சேனை வந்ததைக் கண்டு மனத் தைரியங் கொண்டு, மறுபடியுஞ் சண்டை செய்யத் தொடங்கியுந் துப்பாக்கிகள் நெருப்புப் பற்றாது தாமதப்பட்டதினாற், பறங்கிகளும் வாட்படை கொண்டு போர் செய்தார்கள். இருதிறத்துச்சேனைகளும் விறுவிறுப்போடு போர்செய்கையிற் சில பறங்கிகள் ஒதுங்கி மறைவினின்று துப்பாக்கிகளாற் சுடத் தமிழர் கவண்கள் முதலியவற்றால் அவ்வுபாயத்தை நீக்கினர். இவ்வாறு ஒன்பது நாளும் போர் செய்து பத்தாம் நாளையிற் சங்கிலி இராசன் பரநிருபசிங்கத்தையும், மந்திரிமாரையும் பார்த்து நீங்கள் ஒரு முயற்சியுஞ் செய்யாதிருப்பதென்னை யென; அதற்குப் பரநிருபசிங்கம் நாங்கள் பயின்றிராத புதுப் போராயிருப்பதினால் எங்கள் சாமர்த்தியமிதிலே செல்லாதென்றான். அரசன் சிரித்து நானும் உங்களைப் போலவே இதற்கு முன் இவ்வித போரைக் கண்டிலேன். நான் செய்யுமாதிரியாய் நீங்களுஞ் செய்யுங்களென்று சொல்லிப் பறங்கிச் சேனையின் நடுவே, மான் கூட்டத்திற் புலி பாய்ந்தாற் போலப் பாய்ந்து ஆயிரத்தெழுநூறு பேருக்கு மேற்பட வெட்டினான். அன்று போய் மற்ற நாளாகிய பதினோராம் நாள் இருதிறத்துச் சேனைகளும் எதிர்த்து யுத்தஞ் செய்யத் தமிழ்ச் சேனைகள் இளைத்துப் போனதைக்கண்டு சங்கிலி இராசன் துணை வீரருடன் யானைக் கூட்டத்திற் சிங்கம் பாய்ந்தாற் போலப் பறங்கிச் சேனைக்குட்புகுந்து இரண்டாரயிரத்து நானூறு சனங்களையுஞ் சேனைத் தலைவனையும் வெட்ட, நின்ற பறங்கிகள் முறிந்து கெட்டோடினார்கள். தமிழ்ச் சேனைகள் துரத்திக் கொண்டுபோக மேற்குத் திசையை நோக்கிச் காட்டுக்குட் சென்று. கோட்டைக்குட் புகச் சங்கிலி இராசன் சகலரையும் வெட்டி எறிந்து, கோட்டையையும் இடித்துப் பரவி அங்குள்ள திரவியங்களையும் எடுத்துக் கொண்டு தனது அரண்மனைக்குத் திரும்பினான். சேனைகள் போர் வெற்றியின் சந்தோஷத்தினால் மது உண்டு வெறியினால் மயங்கி ஒருவரை ஒருவர் அடிக்கவும் வையவுந் தலைப்பட்டதினாற் பெருங் கலகமுண்டாக. அதை அடக்கி வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படி மந்திரியிலொருவனை அனுப்பியும், அடங்காததினாலே அரசன் மிகுந்த கோபத்தோடு சென்று, அங்குச் சமைத்திருந்த போசனங்களெல்லாவற்றையுஞ் சேனைத் தலைவனுமில்லாதிருக்க வெட்டிப்புதைப்பித்ததினாற், சேனைகள் ஆறாத வருத்தத்தை அடைந்தார்கள். சேனைத் தலைவன் தனது நித்திய கடனை முடித்தற் பொருட்டு வீரமாகாளியம்மன் கோவிலில் தங்கி நின்றான்.

பறங்கிகள் போரில் இறந்ததையும், தோற்றோடினதையுந் தாங்கள் அந்தரங்கத்திற் செய்த உதவிகள் வாயாமற் போனதையுங் குறித்துப் பரநிருபசிங்கம் விசனமடைந்து, பறங்கிகளுக்காக வெளிவெளியாக நின்று உதவி செய்யவேண்டுமெனக்கருதிக் காக்கைவன்னியனைத் தனக்கு உதவி செய்யும்படி ஓலை எழுதியனுப்பினான். வன்னியன் கையில் ஓலை சேர முன் பறங்கிகள் ஊர்காவற்றுறைக்குப் போய் வன்னியனைப் பிடித்து உன்னை நம்பிப் போரிலேற்பட்டுப் பதினாயிரத்துக்கு மேற்பட்ட சனங்களை இறக்கக் கொடுத்தோமென்றார்கள். நீ எங்களை அழைத்து வந்து ஒருதவியுஞ் செய்யாததினால் எங்களுக்கு அதிக நட்டங்கள் வந்திருக்கின்றது. இந்த மோசஞ் செய்ததினால் உன்னைக் கொலை செய்வதே எங்கள் தீர்மானமென்று நெருங்கிய சமயத்திற் பரநிருபசிங்கம் எழுதிய ஓலையும் வந்து சேர்ந்தது. அதை வாசித்த பொழுது பறங்கிகள் சந்தோஷங்கொள்ளக், காக்கைவன்னியன் பரநிருபசிங்கம் எழுதியவைகளுக்கு உடன்பட்டுப் பறங்கிகளை மறுபடியும்போர்செய்தற் பொருட்டு அணிவகுத்துக் காலமே வரும்படி சொல்லி, அன்றிரவில் நல்லூருக்குப் போய் பரநிருபசிங்கத்தைக் கண்டு, ஆலோசனை செய்து, அங்கு ஓர் இடத்தில் மறைந்திருந்தான். மறுநாட் காலையில் வன்னியன் சொற்படி, பறங்கிகள் அணிவகுத்து வந்து மேற்கு வாசலை வளைந்து கொள்ளச், சங்கிலி இராசன் இதையறிந்து, சேனைகளைத்திரட்டி மேற்குவாசற்புறத்தே அணி அணியாய்த் துணை வீரருடன் தைரியங் கொண்டு நின்றான். அப்பொழுது காக்கைவன்னியன், சேனைகளுக்குள் நுழைந்து சமீபத்தினிற்கப், பரநிருபசிங்கமவனோடு யோசித்தபடியே, "வாய்ச் சாமர்த்தியமுள்ள ஒருவன் போர்க்காரியத்தின் அந்தரங்கஞ் சொல்லும்படி உம்மை இன்னவிடத்தில் தேடிக் கொண்டு நிற்கிறான்" என்று வேறொருவனைச் சேனாதிபதியிடமனுப்பிச் சொல்லுவிக்கச், சேனாதிபதி அதையறிந்து வரும்படி உடனே அவனுடன் செல்ல, அங்கு நின்றவன் தன் வாய்ச்சாமர்த்தியத்தினால் மனதைக் கவரத்தக்க பேச்சுக்களை வருவித்துப் பேசித்



தடுத்து நிற்குஞ் சமயத்தை அறிந்து, வன்னியன் தன் உடுப்பைமாற்றிச் சொயகோலத்தோடு வெளிப்பட்டான். அரசன் அவனைக் கண்டு எதிர் கொண்டோடி என் மேல் தயைகூர்ந்து உதவி செய்வதற்கு இப்பொழுது தான் வந்தாயாவென்று சொல்லிக் கட்டி முத்தமிட, இவனுங்கட்டி முத்தமிடுபவன் போற் பிடித்தபிடி விடாமற் பிடித்துக் கொண்டான். இருவரும் ஒருவரோடொருவர் சேர்ந்து, விழுந்து புரண்டு நிற்குஞ் சமயத்திற் பறங்கிச் சேனைகள் கிட்டி வந்ததினால், சேனாதிபதி இல்லாதிருந்துந் தமிழ்ச் சேனைகள் தங்கள் ஆயுதங்களோடு யுத்தத்திற்குச் செல்லப், பரநிருபசிங்கம் அவர்களை நோக்கிச் சேனாதிபதி உத்தரவின்றி ஒருவரும் ஆயுதந் தொடப்படாதென்று தடுக்கச். சேனைகள் எங்களுக்கு ஆயுதமெடுக்க உத்தரவில்லையேயென்று பரிதவித்து ஓலமிட்டுக் கொண்டு, அரசனையும் வன்னியனையும் அந்த நிலையில் விட்டுப் பிரிந்து ஓடிப் போனார்கள். பறங்கிகள் சங்கிலி இராசனைப் பிடித்து யாதொரு தடையுமின்றி விலங்கிட்டுச் சேனாதிபதியை வாளினாற் கொலையுஞ் செய்து, கோட்டையையும் ஒப்புக் கொண்டார்கள்.

உடனே பரராசசேகரன் வன்னிக்காட்டுக்கு ஒழித்தோடிப் போகப் பறங்கிகள், அவ்வரசனைப் பிடித்துத் தருபவர்களுக்கு ரூபா ௨௫.000-ம் உபகாரமாய்க் கொடுத்து விடுகிறோமென்று பறை சாற்றுவிக்கச், சங்கிலி இராசனின் மந்திரியாகிய பிராமணனொருவன் அரசன் போன குறிப்பை அறிந்து, இளநீரும் எலுமிச்சம்பழமுங் கொண்டு, வன்னிக்காட்டிற் சென்று, எங்குந் தேடியுங் காணாது வருகையில் அரசன் எதிர்கொள்ள உபசார வார்த்தை சொல்லிப் பிராமணன் வாளினால் இளநீரைத் திறந்து எலுமிச்சம்பழத்தை அறுத்துப் பிழிந்து விட்டுக் கொடுத்தான். அவன் குனிந்து நின்று ஆயாசத்தோடு குடிக்கச் சண்டாளப் பிராமணன் அவன் சிரசைக்கொய்து வந்து பறங்கிகள் கையிற் கொடுக்கப், பறங்கிகள் அரசனைப் பிடித்துத் தருபவர்களுக்கு, உபகாரங் கொடுப்போமென்று கூறியிருக்க, நீ அரசனைக் கொன்றதுமன்றி அவனுக்குச் செய்த நன்றியையும் அழித்ததினால் உன்னையும் அப்படியே செய்ய வேண்டுமென்று கொலை செய்தார்கள்.

பறங்கி இராசன் சங்கிலி இராசனை நீதாசனத்தின்கண் நிறுத்தி விளங்கியபொழுது, அவன் முடிசூட்டி அரசு செய்யாததினாலும், பிதா உயிருடனிருக்கப்பிதாவின் சம்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துக்கு விரோதமாய்க் கலகத்தை உண்டாக்கினதினாலும், முடிக்குரிய இராசகுமாரனை அநியாயமாய்க் கொலை செய்த பாதகத்தினாலும் நீதி தவறி அநேக கொடுமைகளைச் செய்ததினாலும், அவனைக் கொலை செய்யும்படி உத்தரவு செய்தான். இதுசெய்தியைக் கேட்டவுடனே அவன் மனைவி தற்கொலை புரிந்திறக்கப், பிள்ளைகளைத் தரங்கம்பாடிக்கு அனுப்பிக் காக்கைவன்னியனுக்குச் சகல உபகாரங்களுஞ் செய்தனுப்பினான்.

பறங்கிகள் இராச்சியத்தை ஒப்புக்கொண்டு நல்லூரிலிருந்தார்கள். காலயுத்தி வருஷம் ஆனி மாதம் யாழ்ப்பாணம் பறங்கி அரசாட்சிக்குள்ளாயிற்று. பறங்கிகள் நல்லூரிலிருந்து கொண்டு புறக்கோட்டை மதிலை இடிப்பித்துக் கற்களைக் கொண்டு போய்க், இடிபட்டிருந்த தங்கள் கோட்டையை மறுபடி கற்கோட்டையாகக் கட்டி, அதன் கீழ்ப்புறத்தில் வீடுகளையும் அரசாட்சி மண்டபங்களையுங் கட்டுவித்துச், சுற்றுப் புறங்களிற் காடுகளையும் வெட்டுவித்துச், சமீபத்திற் பிரசைகள் குடியிருக்க வசதியும் பண்ணினார்கள். பரநிருபசிங்கந் தங்களுக்கு அரசாட்சி கிடைக்கும்படி செய்த உதவிக்காக அவனுக்குள்ள ஏழு கிராமங்களுடன் நல்லூர், மாதகல் என்னும் இரண்டு கிராமங்களையும் பெருந்தொகையான திரவியங்களையும் முன்னிருந்தபடி மந்திரி உத்தியோகத்தையும், பரராசசிங்கத்துக்குக் கிராம அதிகாரத்தையுங் கொடுத்து இருவரையுங் கனப்படுத்தி வந்தார்கள். அவர்களாற் பறங்கிகளின் அரசாட்சி பெலத்துக்கொள்ளச் சமயகாரியங்களிற் கைவிட்டுச் சிவாலயங்களை இடித்துக் கிறீஸ்து சமயத்தைப் பரப்பத் துணிந்து நல்லூரிலுங் கீரிமலையிலும் உள்ள ஸ்தலங்கள் மாத்திரம் பரநிருபசிங்கமிருக்கிற வரைக்கும் வழங்கி வந்தபடி வழங்கலாமென்று உத்தரவு செய்தார்கள். அவர்கள் அரசாட்சி தொடங்கி ஒன்பதாம் வருஷத்திற் பரநிருபசிங்கமிறக்க, அவனுக்குச் சைவ சமயப்படி சடங்குகள் செய்யப்பட்டது.

பரராசசிங்கத்தை அரசாட்சி ஆலோசனைத் தலைவனாக்கிச் சங்கிலி இராசன் எழுதி வைத்தபடியே அவனுக்குப் பரராசசிங்கமுதலி என்றும், அவன் குலத்துக்கு மடப்பளியென்றும் பட்டஞ் சூட்டிப், பிதாவை நடத்தினதுபோற் கனப்படுத்தி வந்தார்கள். பரராசசிங்கமுதலிக்கு மரணகாலங் கிட்டினபோது தன் குமாரர் ஏழு பேரையும் வரவழைத்து ஆஸ்திகளைப் பங்கிட்டுக் கொடுத்தான்,



நல்லூரையுங் கள்ளியங்காட்டையும் அழகாண்மை வல்ல முதலிக்குக் கொடுத்து, நல்லூரில் தன் மாளிகையில் இருத்தினான். தனபாலசிங்க முதலிக்கு மல்லாகத்தையும், வெற்றிவேலாயுத முதலிக்குச் சண்டிலிப்பாயையும், விசயதெய்வேந்திர முதலிக்கு அராலியையும், திடவீரசிங்க முதலிக்கு அச்சுவேலியையும், சந்திரசேகர மாப்பாண முதலிக்கு உடுப்பிட்டியையும், இராசரத்தின முதலிக்குக் கச்சாயையுங் கொடுத்தான். இதுவுமல்லாமல் வேதவல்லி என்னுங் குமாரத்திக்கு வேளாளர் குலத்திலே விவாகஞ் செய்வித்து, மாதகலைக் கொடுத்தான்.

பரராசசிங்கமுதலி காலஞ்சென்றபின் பறங்கிக்காரர்கள் சிவாலயங்கள் எல்லாவற்றையும் இடிப்பிப்பார்களென்றெண்ணி நகுலேசர் கோவிலிலிருந்த பரசுபாணி ஐயர் அக்கோவிற் சாமான்கள் விக்கிரகங்கள் முதலியவற்றைக் கிணறுகளிற் போட்டு மூடிவைக்கக், கந்தசுவாமி கோயிற் பணிவிடைக் காரனாயிருந்த பண்டாரம் என்பவன் அங்குள்ள ஆலயங்களின் சம்பவங்களையும் ஒழுங்கு திட்டங்களையுஞ் செப்புப் பட்டயத்தில் எழுதிக்கொண்டு மட்டக்களப்புக்குச் சென்றான். பரராசசிங்க முதலி மரணமடைந்தவுடன் கங்காதரஐயரின் வம்மிசத்துப் பிராமணக் குடிகள் நல்லூரினின்றும் நீங்கி நீர்வேலியிலும், வடமராட்சிப் பகுதிகளிலு மிருந்தார்கள். அக்காலத்திற் பறங்கிகள் தமிழ் இராசாக்களைப் போல் மாதாக்கர்களை வைக்கக் கருதி இராசரத்தின முதலியின் குமாரன் சேனாதிராய முதலியைக் கீழ்ப்பற்றுக்கும், விசயதெய்வேந்திர முதலியை மேல்பற்றுக்கும், அழகாண்மைவல்ல முதலியின் குமாரன் இராசவல்லப முதலியைத் தென்பற்றுக்கும், திடவீரசிங்க முதலியின் குமாரன் குமாரசூரிய முதலியை வடபற்றுக்கும் மாதாக்கர்களாக நியமனஞ் செய்து அரசியற்றி வருநாளில், காரைக்காலிலிருந்து பல உயர்குல வேளாளக்குடிகள் வந்து வட்டுக்கோட்டையிலுங், காரைதீவு முதலிய தீவுகளிலுங் குடியேறினார்கள்.

சாலிவாகன சகாப்தம் ௧௪௨௮-ம் வருஷமாகிய பரிதாபி வருஷத்தில் இலங்கையை அரசாண்ட தருமபராக்கிரமவாகு மகாராசனிடத்திற் பறங்கிகள் முதல் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தரவு பெற்றுக்கொண்டு போக்குவரவு பண்ணத் தொடங்கினார்கள். கரவருஷம் ஆடிமாதம் சவரியான் முதலிய பறங்கிக்காரரால், வேதத்திற் சேர்ந்த சனங்களைச், சங்கிலி இராசன் சகாப்தம் ௧௪௯௯-ம் வருஷமாகிய சோபகிருது வருஷம் வைகாசி மாதங் கொலை செய்வித்தான். சகாப்தம் ௧௫௦௩-ம் வருஷமாகிய விக்கிரம வருஷத்திற் சவரியான் முதலிய பறங்கிகள் பரநிருபசிங்கத்தின் வழியாய்ச் சங்கிலி இராசனுடன் கொண்டாட்டமாய், அடுத்த வருஷந் தைமாதம் வீடுகட்ட உத்தரவு பெற்றார்கள்.

உலாந்தேசர் இலங்கையை அடைந்து, கண்டியில் விமலதருமராசனுடன் சகாப்தம் ௧௫௨௯-ம் வருஷமாகிய சோபகிருது வருஷம் சினேகங்கொண்டு, நுமக்குப்படைத் துணை யாவேமென்று சொல்ல, அவன் அவர்களை அழைத்துத் தன்னுடன் வைத்துக்கொள்ள, முன் கண்டியிலிருந்து துரத்தப்பட்ட இராச குமாரத்தியைப் பறங்கிகள் மன்னாரில் வைத்து வளர்த்து அவளுக்குத் தோன்கத்தினாளென்று பெயருமிட்டு அடுத்த வருஷங்களில் கண்டி அரசாட்சியைப் பிடித்துக் கொடுக்க ஆரம்பித்தபோது, விமலதருமராசன் உலாந்தேசரைத் துணையாகக்கொண்டு பறங்கிகளை துரத்தித் தோன்கத்தினாளையும் விவாகஞ்செய்தான். கீலக வருஷத்தில் உலாந்தாக் கப்பற் சேனாதிபதியுஞ் சேனைகளிற் பலரும் மதுவெறியினால் மயங்கி விமலதருமராசனை நிந்தனை செய்து, மூர்க்கமாய் நின்றதினால், அவன் அவர்களிற் சிலரைக் கொலை செய்விக்க, உலாந்தேசர் அவ்விடம் விட்டுக் கொழும்புக்குச் சென்று கோட்டை கட்ட ஆரம்பித்த பொழுது, பறங்கிகள் தடை செய்ததினால், அவ்விடத்தினின்று நீங்கி இலங்கையின் வடதிசையில் வந்திருந்து சகாப்தம் ௧௫௩௩-ம் வருஷமாகிய சாதாரண வருஷம் தென்மார்க்கமாய்க் கப்பலேறி வந்து இலங்கையிலுள்ள அரசருடன் கொண்டாடிப் படைத்துணை வருகிறேமென்று சொல்லியும், அவர்கள் அதற்கு உடன்படாமையால், தங்கள் தேயத்திற்குப் போய் விட்டார்கள்.

இவ்வாறிருக்கப் பறங்கிகள் சகாப்தம் ௧௫௩௮-ம் வருஷமாகிய ராக்ஷஸ வருஷத்தில் யாழ்ப்பாணக் கோட்டையைக் கட்டத் தொடங்கினர். மூன்று வருஷத்தின் பின் திருக்கோணமலையிலும் மட்டக்களப்பிலுங் கோட்டைகளைக் கட்டினார்கள். யாழ்ப்பாணக் கோட்டை சகாப்தம் ௧௫௪௯-ம் வருஷமாகிய ருதிரோற்காரி வருஷத்திற் கட்டப்



பட்டு முடிந்தது. அடுத்த வருஷங்களில் உலாந்தேசர் திருக்கோணமலை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு முதலிய இடங்களைப் பிடித்து, நீர்கொழும்பைப் பறிகொடுத்தார்கள். யாழ்ப்பாணத்துத் தேசாதிபதியாகிய அந்தோனி மிரால் என்பவன் மன்னாரிலிருந்து கொழும்புக்குப் போன பொழுது சகாப்தம் ௧௫௫௯-ம் வருஷமாகிய ஸ்ரீமுக வருஷம் உலாந்தேசர் பிடித்துச் சிறைச் சாலையையடைவித்தார்கள். சகாப்தம் ௧௫௮௦ வருஷமாகிய ஏவிளம்பி வருஷம் மாசி மாதம் ஆறாந்தேதி உலாந்தேசர் மன்னாரைப் பிடித்துக்கொண்டு, பங்குனிமாதந் தொடங்கி யாழ்ப்பாணத்தைச் சூழ்ந்துவரச் சேனைகளை நிறுத்தி, அந்த மாதக் கடைசியில் ஊர்காவற்றுறைக் கோட்டையைப் பிடித்து அதன் வழியாய்க் காரைதீவிலிறங்கினர். அங்கே சிலகாலத்துக்குமுன், உலகுகாவல முதலி என்னும் உயர்குல வேளாளன் ஒருவன், சோழதேசத்திலே விதித்த இராச தண்டனைக்குப் பயந்தோடி வந்து, காரைதீவிலே, களபூமி என்னுமிடத்திற் பெருஞ் செல்வனாயிருந்தான். அவன் அவர்களுக்குச் சகல வசதிகளுங் கொடுத்து அனுசரிக்க, அவர்கள் அவனிடத்தில் இராச்சிய வளமைகளைக் கேட்டு விசாரித்துக் கொண்டு, யாழ்ப்பாணக் கோட்டையைப் பிடிப்பதற்கு உபாயங்கேட்க; அவன் ''நான் சொல்லுந் தினத்தில் நீங்கள் வருவீர்களாகில் வசதியாய்க் கொண்டு போய் விடுவேன்'' என்றான். அதற்குச் சம்மதித்துச் சேனைகளைத் திட்டம்பண்ணி மூன்றரை மாதக்காலங் காத்திருந்தும், வசதிவாயாதிருக்க, ஒரு நாள் இரவிலே பறங்கிகள் நடன சங்கீத விநோதராயிருக்குஞ் சமயத்திலே, உலகுகாவல முதலி வழிகாட்ட உலாந்தேசர், திறந்திருந்த கள்ள வாயில்வழியாய் நுழைந்து கோட்டைக்குட் சென்று, பறங்கிகளை இராவிராவாய் வெட்டியுஞ் சுட்டுங் கொன்றுவிடப், பறங்கிப் பிணங்கள் கடலிலுங் கரையிலுங் கிடக்க, உலாந்தேசர் களிப்புக் கொண்டாடுவதைக் கண்டு சகலருந் திகைப்படைந்தார்கள். சகாப்தம் ௧௫௮௧-ம் வருஷமாகிய விளம்பி வருஷம் ஆனி மாதம் ஒன்பதாந்தேதியிலன்று யாழ்ப்பாணம் உலாந்தேசர் அரசாட்சியின் கீழாயிற்று. அந்நாளையில் புரோடெஸ்டாண்டுக் கிறிஸ்துமதம் யாழ்ப்பாணத்துட் பரவலாயிற்று. பறங்கி அரசு போயும், அவர் பாஷைச் சொற்களாகிய அலவாங்கு, தோம்பு, கதிரை முதலியன இன்னும் வழங்கி வருகின்றன. இவ்வித சொற்கள் அரிதாய்த் தென்னிந்தியாவிலுஞ் சில பகுதிகளில் வழங்கி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைலாயவன்னியனின் சகோதரியை விவாகஞ் செய்திருந்த பூதத்தம்பி, மனுவலந்திராசி என்பவர்கள் உலாந்தேச அரசாட்சியாருக் கரசிறைவிகித முதலிமாரானார்கள். அத்தேசாதிபதி அந்திராசிக்கு அதிக நண்பனாயும், தேசாதிபதியின் தம்பி பூதத்தம்பிக்கு அதிக நண்பனாயுமிருந்தார்கள். ஒருநாள் பூதத்தம்பி அந்திராசியைத் தன் வீட்டுக்கு அழைத்து விருந்திட, அவன் பூதத்தம்பி மனைவியின் பேரழகினால் மயங்கி, மிகுந்த விகாரத்தோடு வீட்டுக்குச்சென்று, ஒரு தூதனுப்பி, "நீர் என்னுடன் இணங்கிச் சினேகமாய் இருக்கச் சம்மதித்தால் உமக்கு வேண்டிய திரவியங்களும, மற்றும் எவ்வித பொருள்களுந் தருவேன்" என்று கேட்பிக்க, அவள் அந்திராசியை வைது, தூதுவந்தவனைத் துடைப்பத்தாலடித்துத் துரத்தி விட்டாள். இது காரியத்தினால் இருவருக்கும் பகை நேரிட்டிருக்குங் காலத்தில், ஒருநாள் அந்திராசி அரசாட்சியாரின் வேலைக்கு மரங்கள் அழைப்பிக்கக் கச்சாய்த் துறைக்குக் கட்டளை யனுப்ப வேண்டுமென்று வெள்ளைக் கடதாசியிற் கையொப்பமிடுவித்து, அதிலே கோட்டை பிடிக்க இன்ன இன்ன உதவி செய்வேனென்று பறங்கிக்காரருக்குப் பூதத்தம்பி எழுதிக் கொடுத்தனுப்பக், கொண்டு போனவனிடத்திற் கண்டுபறித்தேனென்று அந்திராசி தேசாதிபதி கையிற் கொடுக்கத், தேசாதிபதி அதைப் பொய்க் குற்றச் சாட்டென்றறிந்தும், அந்திராசியின் வேண்டுதலுக்காகப் பூதத்தம்பியைக் கொலை செய்வித்தான். அவ்வேளையில் தேசாதிபதியின் தம்பி ஊர்காவற்றுறையிற் கடற்கோட்டைகட்டுவித்துக்கொண்டு அங்கிருந்தமையாற்றன் சினேகனுக்கு உற்றவிடத்துதவி செய்யக் கூடாதவனாயிருந்தான். இதைக் குறித்துப் பூதத்தம்பியின் மைத்துனனாகிய கைலாயவன்னியன் கொழும்பேறி வழக்குப் பேசினபோது, தேசாதிபதியையும், அந்திராசியையும் அங்கு வரும்படி கட்டளை வர இருவரும் புறப்பட்டுப் போகும் பொழுது, தேசாதிபதி கடலில் விழுந்தும், அந்திராசி ஆனை இடறியுமிறந்தார்கள். அவ் வருஷத்தில் வெள்ளப் பெருக்கினால், ஊர்காவற்றுறையில், அனேக மனிதரும், மிருகங்களும் இறந்து போயினர். உலாந்தேசர் உலகுகாவலமுதலிக்குச் சகல திரவியங்களையுங் கொடுத்து, மரபாலுயர்ந்தமுதலியின் சகோதரியையும் விவாகஞ் செய்வித்தனர். அவனுக்கு வாயிலுத்தியோகமும், மரபாலுயர்ந்த முதலிக்கு முன்னிருந்தபடி திரவியச்சாலைத் தலைமையையுங் கொடுத்தார்கள். உலகுகாவலமுதலி இறந்தபின், அவன் மகன் இராயதுங்க முதலிக்கு,



மரபாலுயர்ந்தமுதலியின் குமாரத்திகள் ஏழுபேரில் ஒருத்தியை விவாகஞ் செய்வித்துப் பூலோககைலாய முதலிக்குத் திரவியச்சாலைத் தலைமையையுங் கொடுத்து, வேறு சில தத்துவங்களையுங் கொடுத்தனர்.

அக்காலத்திலே, சந்தக்சாய்பு என்பவனால் மகமது மார்க்கத்திற் சேர்ந்து, தமிழ் பேசுஞ் சோனகக் குடிகள், காயலிப்பட்டன. முதலிய இடங்களிலிருந் துவந்து தென்மிருசுவில் என்னுமூரிலே குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் என்னுமிடங்களில் உள்ள சந்தைகளில் வியாபாரஞ் செய்து கொண்டு, தாங்கள் குடியிருந்த மிருசுவிலுக்கு உசனென்னும் பெயருமிட்டனர். சிலகாலம் அவ்விடமிருந்து அங்கு வசதி இல்லாமையினால், நல்லூரிலெ கந்தசுவாமி கோவில்கட்ட இருக்குமிடத்தில் வந்து குடியேறினார்கள். சோனகரை அவ்விடமிருக்க விட்டாற் கந்தசுவாமி கோவில் கட்டத் தடையாயிருக்குமென்று நினைத்துத் தமிழர் கூடி அவர்களைத் துரத்தத் தெண்டித்தும் முடியாதிருக்க, அந்நிலங்களுக்கு அதிகவிலை தருகிறோமென்று கேட்டதற்குஞ் சோனகர் சம்மதிக்கவில்லை. ஒன்றுக்கும் இடங் கொடாததினால், தமிழர் கோபங் கொண்டு சோனகரின் கிணறுகளிற் பன்றி இறைச்சிகளைப் போடும்படி தங்கள் சிறைகளுக்குக் கட்டளையிட, அவர்கள் அவ்வாறு செய்து முடித்தனர். அது கண்ட மாத்திரத்திலே சோனகர் அழுது புலம்பிப் பசி பட்டினியாய்க் கிடந்து, ஆற்றாமற் கடைசியில் தங்கள் மதாசார வழிபாடுகளைக் குறித்து எக்காலத்திலுந் தடை செய்யாதிருக்க வேண்டுமென்று தமிழரிடத்திலே உடன்படிக்கை செய்வித்துக் கொடுத்த விலையையும் பெற்றுக் கொண்டு, நாவாய்த்துறைக்குக் கீழ்ப்புறமாய்க் குடியேறினார்கள், நாவாய்த்துறை நாவாந்துறையென வழங்கி வருகின்றது.

அக்காலத்திலே, உத்தரகோசமங்கையிலே, ஒரு பெருங் கலகமுண்டு பட்டதினால், அதற்குப் பயந்து பல வேளாளக் குடிகளுஞ், சில விட்டுணுசமயம், சிவ சமயப் பிராமணக் குடிகளுமங்கிருந்து வந்து காரைதீவு வட்டுக்கோட்டை முதலிய இடங்களிற் குடியிருந்தனர். சோழமண்டலத்திலிருந்து சில பட் குடிகள் வேளாளரின் கீழ்ப் பயிர்க்குடிகளாயிருந்து பிழைக்கலாமென்றெண்ணி வந்தும், அப்படிப்பிழைக்க இடங் காணாததினாற் சில குடிகள் தங்களூருக்குத் திரும்பினர். சிலர் சான்றாரைப் போற்

பனையேறுந் தொழிலைப் பயின்றார்கள் இவ்வாறு பள்ளரும் நளவரும் பனையேறத் தொடங்கிக் கொண்டதினாற் சான்றாருக்குப் பிழைப்புக் குறைந்தது. அதினாற் சான்றார் துரைமார் வீடுகளிற் பணிவிடைகளுக்கு ஏற்பட்டுச் சீவனஞ் செய்துஞ், சிலர் வலைவீசியும் பிழைத்தார்கள். சிலர் பிழைப்புக்கு வழியில்லாததினால், வேளாளர்களுக்கு அடிமைகளாக எழுதிக் கொடுத்தார்கள். முன்னாட்களிற் சில வறிய குடிகள் தங்களைக் கோவில்களுக்கு அடிமைகளாக எழுதிக் கொடுத்ததனாற் கோவிலாரென்றழைக்கப்பட்டுப், பின் கோவியரெனப் பெயர் பெற்றார்கள்.

பறங்கிகள் அரசாட்சியைக் கைப்பற்றியபின் இடிபட்ட கோவில்களின் எசமான்கள் கோவிலாரைப் பிறருக்கு விற்பனவு பண்ணினார்கள். பிற்காலத்தில் வடகரையிலிருந்து சில சிறைகள் வடசிறைக் கோவியமென்னும் பெயரால் விலைப்பட்டனர். இப்படியே சிறை விற்பனவு கொள்வனவு வரவர அதிகப்படவே அரசாட்சியார் அவற்றைத் தங்கள் அதிகாரத்துக்குக் கீழாக்கித் தங்களுக்கு வருமானத்தை உண்டாக்கிக் கொண்டனர். உலாந்தேசு மன்னர் கிறீஸ்துமதத்தைப் பரப்ப நினைத்து, யாழ்ப்பாணத்தை முப்பத்திரண்டு கோட்டங்களாக வகுத்து, ஒவ்வொரு கோட்டத்திலும் ஒவ்வொரு கோவில் கட்டுவித்து, அந்தந்தக் கோவில்களில் தங்கள் சமயக் குருமாரை நியமித்து ஆங்காங்கே போதனை செய்யும்படி கட்டளை செய்து, பல வரிகளையும் ஏற்படுத்தினார்கள்.

போகிச்சாதியாரிற் பல குடிகள் தங்கள் எசமான்களைச் சிவிகையில் வைத்துக் காவிய காரணத்தாற் சிவியாரென்று அழைக்கப்பட்டார்கள். அரசாட்சியார், யாவருந் தங்கள் தங்கள் மரபிற்கேற்பச் சிவிகை காவுவித்தல் மேளமடிப்பித்தல் முதலிய வரிசைகளைச் செய்யப் புகுங்கால், அரசாட்சியாரிடம் வரிசைப்பத்திரம் பட்டக்கடதாசி முதலியவற்றைப் பெற்றவர்களேயன்றி மற்றவர்கள் நடத்தக் கூடாதென்று கட்டளைபண்ணி அதிக வருமானங்களை அரசாட்சிக்கு வரும்படி செய்தார்கள். முன்னிருந்த ஒவ்வொரு அன்னிய அரசர்களுந் தங்கள் தங்கள் சமயத்தையே ஸ்தாபிக்கவும், மெய்ச் சமயமாகிய சைவ சமயத்தைத் தாழ்த்தவுங் கருதித் தங்களால் இயன்றளவு எத்தனையோ உபாயங்களைச் செய்தனர்.

சில்லாட்டைக் கொடுங்கோலரசினராகிய பறங்கிக்



காரர், உலாந்தாக்காரர் காலங்களிலும். இங்கிலீஸ் அரசினர் காலத்திலும், அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களிலுள்ள கிறீஸ்துமதச் செல்வர்கள், தம் மத விருத்தியைக் கருதி, நாடு நாடாய்ச் சென்று தம் மதபோதனை செய்யுங்களென்று வேதனங் கொடுத்தனுப்ப ஈண்டுவந்த பாதிரிமார், கீண்மக்களாகிய நளவர் பள்ளர் கரையார் முக்குகர் முதலியோருக்குங் கல்வியுணர்ச்சியில்லாத மிடிமிடைந்த ஏழையர்க்குஞ் சூனியோபாதான சிருட்டியைக் கூறும் விவிலிய நூலை வீடுகடோறுஞ் சென்று முற்றத்திலே உரலே ஆசனமாகக்கொண்டிருந்து போதிக்க, அவர்கள் பாதிரிமார்களின் உடல் உடைவாக்கு எனனும் வேற்றுமைத் தோற்றங்களைக் காண்பது கருதிக் கேட்டு வருவாராயினார். பாதிரிமார் போதித்து மீளுங் காலெல்லாம் அவர்கள் வந்திருந்து போன தம்மில்லிடத்தை அச்சனங்கள் சாணத்தாற் சுத்தி செய்து வருவாராயினர். இங்ஙனம் பாதிரிமார் வந்து போதித்ததும், அவர்கள் சாணந் தெளித்ததும் பன்னாட்டொழிற் பயனில் செய்கையாக, இருதிறத்தினர் வாயுங் கையுஞ் சலித்தன. பாதிரிமார் தங்கூற்றங்ஙனமாயினமை கண்டு, இனி யாது செய்வோமெனக் கவன்று நெட்டுயிர்த்துத் தம்மெசமானர் இச் செய்திகளையெல்லாம் உள்ளவாறுணர்வாராயின் வேதனத்தைக் கொடாரென நொந்து, இங்ஙனமோர் சூட்சி செய்வாராயினார். இங்குள்ளாரிற் சிலரைப் போதகர்களாக நியமனஞ் செய்து அவர்களைக் கொண்டும் விவிலிய நூலைப் போதிப்பித்தல் வேண்டுமென்று தம்மெசமானருக்கெழுதிப் பொருளுதவி பெற்று, அப்பொருள் வழியாய்ச் சிலரைத் தம்மதத்தினராக்கி அவர்கட்கு மாதந்தோறும் வேதனங் கொடுத்து, ஆங்காங்கு போதித்து வரும்படி சொல்ல, அவர்கள் சில துண்டுப் புஸ்தகங்களோடு தங்கள் சுய மதத்திற்கும் உலக விஷயங்களுக்குமேற்ற இடங்களிற் போய்த் தாங்கருதிச் சென்ற கருமம் முடித்து மீளுமவதியில், அங்குள்ள சிலர் கேட்கும்படி தாங்கொணர்ந்த புஸ்தகத்தில் ஓர்வசனம் வாசித்து மெய்யான தேவனை நம்புங்களென்று சொல்லி, அப்பொழுது கேள்வி கேட்பாருண்டேல் அவர்களையுங் கையமர்த்தித் தமது சுமை குறையும் பொருட்டுத் தம்மிடத்துள்ள துண்டுக் கடதாசிகளைக் கொடுக்க, வாங்குவோர் தமக்கு வெற்றிலை பாக்கு புகையிலை முதலியன மடித்து வைக்கலாமென்றும், வன்னக் கடதாசியாயின் தங்கள் பிள்ளைகளுக்கு விளையாட்டுக்குதவுமெனவுங் கருதி வாங்குகின்றார்கள். கிறீஸ்துமதத்திற் புகுவது பொருள் பற்றியென்பது பலரின் கொள்கை. இதற்குத் திருஷ்டாந்தம் பிதாவைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பானை உடைப்பித்தோர், மாவிட்டபுரத்திற் கந்தசுவாமி கோவிலுக்குப் போயினோர், உழுதோர் முதலியோரின் பல சங்கதிகளுளவாயினுஞ் சென்ற வருஷம் நடந்த ஓர் சிறுச்சங்கதி உண்டு. அது ஓர் போதகர் ஒரு வறிய பெண்ணுக்கு மாத விகிதம் இவ்வளவு ரூபா தருகிறேன் நீ இனிமேல் வீபூதி பூசவும் வேண்டியதில்லை: சைவ சமயக் கோவில்களுக்குப் போகவும் வேண்டியதில்லை: என்னுடைய சேட்சுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் வாவென்று சொல்லி அங்ஙனம் ரூபாக் கொடுத்துச் சேட்சுக்கு அழைப்பித்து வரும் நாளிற் சித்திரை வருஷப்பிறப்பும் வந்தது. அந்தப் பெண் ஊர்வழக்கப்படி வருஷப் பிறப்புக்கு வீட்டுப் பொங்கல் நடத்தவில்லை. அடுத்த மாதம் அவ்வூர் அம்மன்கோவிலில் வருஷாந்தர பொங்கல்கிட்ட, அப்பெண் நான் வருஷந்தோறும் கோயிலுக்குச் செய்து வந்த பொங்கலை இன்று விடுவேனேயாயின் எனக்கு யாது நிகழுமோவென நினைந்து ஒருவாறு அப்பொங்கலை நடத்தினாள். இதனையறிந்த போதகர் அடுத்த மாசம் ரூபாய்க் கொடுத்திலர். இவ்வாறு செய்து வரும் போதகமார், பாதிரிமார் தஞ்சேட்சுக்கு இன்ன நாளைக்கி வருவாரென்றறிந்தவுடனே அப்பாதிரிகளுக்குச் சபைப்பொலிவு காட்டும்படி தஞ்சினேகர் வீட்டுக்கு ஒரு தரத்துக் கிந்தரஞ் சென்று அவர்களை வருந்தியழைப்பது அன்றும் இன்றும் நாளையும் வழக்கம். இப்பாதிரிமாரும் போதகமாரும் இவ்வாறு செய்து மதாபிமானங் கொண்டு தங்கள் எசமானருக்கு வருஷத்துக்குவருஷம் தம்மதத்திற் புகுவோர் பெருந் தொகையினரென அன்று முதல் இன்றும் அறிக்கைப் பத்திரமனுப்பிவருகின்றார்கள். சின்னாட் பல்பிணிச் சிற்றுடல் வளர்ப்பான், தம் மதம் நழுவிப் பிறர் மதந் தழுவி நடிப்பது எவ்வளவோரறியாமை.

இஃதிப்படி இருக்க இங்கிலீஷ் அரசினர் தங்கள் பலத்தினாலும், வீரத்தினாலும், நுண்ணறிவினாலும் உலாந்தேசரிடம் யாழ்ப்பாணத்தை சகாப்தம் ௧௭௧௮-ம் வருஷத்திற் பிடித்துத் தங்கள் நியாயப் பிரமாணங்களை இலங்கை முழுதுக்குஞ் சகாப்தம் ௧௭௩௮-ம் வருஷத்தில் நிலை நிறுத்துவாராயினர். இவ்வரசினர் முன்னிருந்த அன்னிய அரசரைப் போற் கொடுங்கோலரசு செலுத்திக் குடிகளை வருத்தாது எச்சமயத்தவர்களுந் தங்கள் இஷ்டப்படியே சமயாசாரங்கண் முதலியஎவ்வகைக் கிரிகைகளையுஞ் செய்தற்கிடங் கொடுத்துச் செங்கோனடாத்தி வருகின்றனர். இத்தேசத்திற் கிறீஸ்து மதம், மகமதிய மதங்களும் வழங்கி வருகின்றன. ஆயினும், இவ்வியாழ்ப்பாணத்தளவு ஓர்பாகத்தையும் இந்தியாவில்இதற்குச் சரிவந்த ஏதேனுமொருபாகத்தையும் அதற்குச்சரிவந்தசனத்தொகையையும் ஒப்பிட்டு, எங்கே ''அதிககிறீஸ்தவர்களுங் கத்தோலிக்கரும், மற்றும் பிற மதஸ்தர்களும்'' இருக்கிறார்களெனக் கருதுகையில், இந்தியாவில் நூற்றுக்கு இரண்டாகவும், யாழ்ப்பாணத்தில் நூற்றுக்குஒன்றாகவுமிருக்கக்காணப்படுகின்றது. இக்காலத்தினர் மேன்மேலும் கல்வி, செல்வம், பொறை, தயை, தானம், தைரியம் முதலியவற்றிற் குறைவில்லாது தங்கள் பெயர்களை விளக்கித் தூண்டா விளக்குகளாய் இவ்விடத்துங் கன்னியாகுமரி தொடங்கி இமயமலை பரியந்தமுள்ள இடங்களிலுஞ், சிங்சப்பூர், பினாங்கு, சீனா, ஆபிரிக்கா, அமெரிக்கா, லந்தோம்பட்டன முதலிய இடங்களிலுந் தங்கள் கல்வித் திறமைகளைச் சாமர்த்தியத்துடன்காட்டினர்களென்பது யாருக்குந் தெரிந்த காரியம்.

இவ்வரசினர், இம்மை மறுமை இன்பங்களையும் இறுதியில் முத்தியையும் பயத்தற்கு ஏதுவானதும் யாவராலும் வணங்கப் படத்தகும் பெருந்தகைமையினையுடையதுமாகிய வித்தியா தருமத்தை விருத்தி செய்தலின் மிகவூக்கமுடையவராய், ஒரு கோட்டத்திற் பலவாக முப்பத்தரண்டு கோட்டங்களிலுஞ் செல்வர் வறியர் எனப் பேதங்குறியாது எல்லாப் பிள்ளைகளும் நாடோறுங் கல்வியில் விருத்தியாகும் பொருட்டுப், பற்பல வித்தியாசாலைகளை ஸ்தாபித்து, அவ்வித்தியாசாலைகளிற் கல்வி ஒழுங்காய்க் கற்பிக்கப்படுகின்றதோ என்பதனை பரீட்சித்து, அப்பரீட்சைக்கேற்ப வருஷந்தோறும் ரூ ௪00முதல் ரூ ௩000 வரையில் ஈந்து வருகின்றார்கள். அமெரிக்கன் மிஷனரால் சகாப்தம் ௧௭௪௯-ம் வருஷமாகிய சுபானுவருஷம் வட்டுக்கோட்டையில் ஸ்தாபிக்கப்பட்ட (Seminary) செமினாரியிற் கல்வி கற்றோர்கள் அதிக பிரபல்லியமுள்ளவர்களாயிருக்கின்றார்கள். இக்காலத்துள்ள புண்ணியசீலர்கள் தமிழ்க்கல்வியையும், சைவசமய சாத்திர உணர்ச்சியையும் மேன்மேலும் விருத்தி செய்வதற்குத் தங்களாலியன்றளவு முயற்சி செய்து, அரசாட்சியாரின் உதவியையும் பெற்றுக்கொண்டு, பல இடங்களிலே சைவ வித்தியாசாலைகளைத் தாபித்து ஒழுங்கு பெற நடத்தி, நிகண்டு, கணக்கு, இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம், நன்னூல் முதலிய கருவி நூல்களையும் உரையோடு ஆத்திசூடி கொன்றைவேந்தன், மூதுரையென வழங்கும் வாக்குண்டாம், நல்வழி, நன்னெறி, நாலடி நானூறு, பரிமேலழகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருரையோடு கூடிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனார் அருளிச்செய்த திருக்குறள் முதலிய நீதி நூல்களையும், நைடதம், பாரதம் இராமாயண முதலிய காவியங்களையுஞ் சைவ வினாவிடை, திருக்கோயிற்புராணம், இதன் சாரமாகிய சிதம்பரமான்மியம், கந்தபுராணம், திருத்தொண்டர் பெரிய புராண முதலிய பல பதிநூல்களையுங் கற்பித்து வருகின்றார்கள். பற்பல உபாத்தியாயர்கள் தங்கள் சுயநயங்களைக் கருதாது தங்கள்பாற் கல்வி கற்கவரும் பிள்ளைகளுக்குப் புத்தகம் போசனம் முதலியவற்றைக் கொடுத்து அத்தியந்த ஆசையோடு அவரவர் அறிவிற்கேற்ப நூல்களைச் சொல்லி வருகின்றனர்.

சிவாலயங்கள், விநாயகராலயங்கள், சுப்பிரமணியராலயங்கள் முதலியவைகளிற், கட்டளைப் பிரகாரம் நித்திய நைமித்தியங்கள் வழுவாது நடந்து வருகின்றன. ஒவ்வோராலயத்திலும் வருஷந்தோறும் கந்தபுராணம், திருத்தொண்டர் பெரிய புராணம், திருவிளையாடற்புராணம் திருச்செந்தூர்தல புராணம், திருவாதவூரர் புராணம், சிவராத்திரி புராணம், காசிகாண்டம் முதலிய புராணங்களில்எவ்வெப்புராணம் எவ்வெக்காலத்திற் படித்துமுடிக்க வேண்டுமோஅவ்வப்புராணத்தைஅவ்வக்காலத்திற்படித்து முடித்து ஆங்காங்குள்ள சைவசமயிகளில் ஆண் பெண் இருபாலாரும் ஸ்நானஞ் செய்து நித்தியாநுட்டானங்களை முடித்துக்கொண்டு, நியமப்படி ஒருபோதுண்டும் உண்டி ஒழிந்தும் புராண புத்தகத்தைக் கோவில் அருச்சகரைக் கொண்டு அருச்சனை புரிவித்து, விதிப்படி சுபமுகூர்த்தத்திலே கல்வியறிவிற் சிறந்தஒருவர் திரிகரண சுத்தியுடையராய் ஆரம்பித்து வாசிக்க, இன்னொருவர் வாசிக்கப்படும் இராகத்திலுஞ் சுதியிலும் பொருள் சொல்லத் தினந்தோறுங் கிரமமாய்ப் படிப்பித்து திருக்கல்யாணப் படிப்பு முதலிய விசேஷ தினங்களில் அபிஷேகம் முதலியன விசேஷமாகப்புரிவித்து அலங்காரத் திருவிழா நடாத்திப் புராண நிறைவேற்றுங்காலங்களில் அன்னதானம் வஸ்திரதான முதலிய பலதானங்களை ஈந்து வருகின்றார்கள்.

சமயாசாரியர்களாகிய திருநாவுக்கரசு நாயனாராலும் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாராலும், வேதங்களால் திருக்காப்புச் செய்யப்பட்டிருந்த திருக்கதவு திறக்கப்படவும், அன்று முதல் என்றுந் திறக்கப்பட்டு அடைக்கப்படவுந் தேவாரத் திருப்பதிகங்கள் திருவாய் மலந்தருள்ப் பெற்ற புண்ணியக்ஷேத்திரமாகிய வேதாரணியப்பதி ஆதீன கர்த்தாக்களாகிய சைவக்குருக்கள்மார், வரணி,



கரணவாய், நீராவிப்பிள்ளையார் கோவில் முதலிய இடங்களிலிருந்து கொண்டு தங்கள் சீஷருக்குச் சிவதீட்சை முதலிய கிரியைகளைச் செய்து வருகின்றனர். பிராமணக் குருக்கள்மாரும் அனேகருளர். வரணியிற் பிறந்த, தில்லைநாத தம்பிரான் சோழ மண்டலத்தினுள்ள வேதாரணியம் முதலிய சில தேவஸ்தானத் திருப்பணிகளை நிறைவேற்றிக் கொண்டு தஞ்சாவூர் மகாராசாவைக் கண்டு, தன் விபூதிப் பிரசாதத்தினால், யாரும் மாற்றுதற்கரிதாய் அவரை உபாதித்த நோயை மாற்றித், தான் நிறைவேற்றிய தேவஸ்தானங்களின் பொருட்டு வெகு கிராமங்களும் கோடிக்கரை உப்பளமும் பெற்றனர்.

சோழதேசாதிபதியாகிய திசை உக்கிரசோழன் மகள் மாருதப்பிரவல்லி என்பவள் தனக்குக் குதிரை முகம் மாறிய காரணத்தால் மாவிட்டபுரமெனப் பெயரிட்டுக் கட்டிய கந்தசுவாமி கோவில் போர்த்துக்கேசரால் இடிபட்டு ஆங்கிலேயர் காலத்தில் வெகு சனங்களால் நன்கு மதிக்கற்பாடுடைய சபாபதியையரால் ஏறக்குறைய அறு வருஷங்களுக்கு முன் கட்டப் பெற்று, ஆடி அமாவாசை, மாசி மாதச் சிவராத்திரி முதலிய புண்ணிய காலங்களில் காலை ஐந்து மணியளவில், கந்தசுவாமிக்கு அபிஷேகம் அலங்காரம் நைவேதனம் தீபாராதனை செய்து, வாகனத்திற் சுச்சை சாத்திப், பலவகை வாத்தியத்தோடு அந்தணர் வேதகோஷ்டம் செய்யவும், அடியார் தேவார திருவாசக பாராயணஞ் செய்யவும் எழுந்தருளப்பண்ணிக் கொண்டு வந்து கோவிலிலிருந்து இரண்டு மைல் தூரத்தினதாகிய கீரிமலைச்சாரலின்கணுள்ள சமுத்திரதீரத்திலே உவர்ச்சலமத்தியிற் பெருக்குக் காலங்களிற் சிறிது தோன்றியும் வற்றுக் காலங்களில் முற்றுந் தோன்றியுந், தன்னிடத்துப் பத்தியோடு ஸ்நானம் பண்ணும் அடியார்களின் எவ்வகை நோயையும் நீக்கியருளும் புண்ணிய சுத்த சலதீர்த்தத்தில் நிறுத்திச், சுவாமிக்காச அத்திரதேவரைப் படிக்கட்டளைச் சாமானுடன் சுத்த சல தீர்த்தத்தில் ஸ்நானம் செய்விக்கும்போது சுவாமி திருக்கண்சாத்தியருளிய பின்னர் அம்முகூர்த்தம் முதற் பல்லாயிர சனங்கள் அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து சுவாமிக்கு அருச்சனை புரிவித்துத் தரிசனஞ் செய்யும் பொருட்டுச் சுவாமியை அங்குச் சுத்தி செய்யப்பட்ட கன் மண்டபத்தில் வைத்திருந்து, மாலை ஐந்து மணியளவில் மீண்டும் மாவிட்டபுரத்திற்கு மேற்கூறிய அலங்காரத்தோடு எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வருகின்றனர்.

தமிழ் அரசரின் வாசஸ்தானமாகிய நல்லூரிலே சுவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்தம் ௮௭0-ம் வருஷத்திற் சிங்கையாரிய மகாராசனின் மந்திரியாகிய புவனேகபாகுவினாற் கட்டப்பட்டுப் போர்த்துக்கேசரால் இடிபட்ட கந்தசுவாமி கோவில், உலாந்தர் காலத்தில் இரகுநாத மாப்பாண முதலியாராற் கட்டப்பட்டு வெகுசன சமூகஞ் சேர்ந்து ஆராதனை புரியும் விசேஷ ஸ்தலமாயிருக்கின்றது. பிரமன் மால் முதலாந் பெருந்தகைத் தேவருந் தெரிவரும் அருணிறை சின்மயவடிவாய் யாவரேயெனினுந் தன்னுண்மலரடிமேவி, வழிபாடு மெய் அகம் வாக்கு யாவதும் ஒன்றித்து இடையறா அன்போடு இயற்றுவாராயின், அவ்வவர் வேண்டும் எவ்வகை வரமும் பச்சை மயில் வாகனப் பரமனாகிக் கலியுகமதனில் எளிவந்தருளலாற் கலியுக வரதனென் றடியர்களேத்தும் அறுமுகக் கடவுள் ஈழமண்டலமெனப் பெயர்மருவிய இலங்கை மத்தியில் யாவருமேத்துங்கதிர்காமப்பதியே உவந்தருள் பதியாகக் கொண்டு முழுஅருளுருக் கொண்டெழுந் தருளியபடி எப்படி ''அப்படியே'' இந்நல்லைப் பதியின்கண் ஆண்டுகடோறும். ஆவணி அமாவாசியே தீர்த்தோற்சவத்தினமெனக் கொண்டு நடாத்தும் இருபத்தைந்து நாட்டிருஉற்சவங்களுள் அதிவிஷேச தினமாகிய பத்தாந்திருநாளிலும், ஏனைப் புண்ணிய தினங்களிலும் எழுந்தருளியிருந்து விஷேசானுக்கிரகம் புரிவர். சுவாமி பச்சை மயில் வாகனத்திலும் அவர் சத்தியர்களாகிய தெய்வநாயகியம்மையார் வள்ளிநாயகியம்மையார் இருவரும் வெள்ளி அன்ன வாகனத்திலுந் திருவோற்சவ காலங்களில் திருவீதிப் பிரதக்ஷிணம் வரும்போது அவர்களுடைய திருத்தோற்றத்தைத் தரிசிக்கும் பெறுதற் கரும்பெரும் பேறுடையர்களே இருவினை மும்மலநீங்கி நித்தியானந்தமுத்தி எய்தற்கேதுவாம் அருணெறியடைவர். இவ்வாலயத்தில் நாக்கறுத்தன் முதலிய பத்திவைராக்கியக் கிரியைகள் செய்வோர் பலர். இங்கே தமிழரசர் காலத்திலே தோண்டிக் கட்டிவிக்கப்பட்ட வற்றாத ஆழ்ந்த பகரவடிவினதாகிய முப்புடைக் கூபமொன்றுண்டு. அது யமுனா நதியினின்றும் வருவிக்கப்பட்ட தீர்த்தங் கலக்கப் பெற்றமையால், யமுனா நதியெனபெயர் பெற்றது. இந்நல்லூர்க் கோட்டத்தைச் சார்ந்த நத்தங்களுள் ஒன்றாகிய திருநெல்வேலியின்கண்ணே சிங்கையாரிய மகாராசனால் இருத்தப்பட்ட கார்காத்த வேளாளருள்ளே முடிதொட்ட வேளாளராகிய பாண்டிமழவர் மரபிற்றோன்றிய ஞானப்பிரகாச தேசிகர் சிதம்பரத்திலே **ஞானப்பிரகாசம்** எனப்பெயரிய திருக்குளம் இயற்றுவித்தனர்; சமஸ்கிருதத்திலே சில சிவாகமங்களுக்கு வியாக்கியானமும், சில சைவ சித்தாந்த சாத்திரங்களுந், தமிழிலே சிவஞானசித்தியாருக்கு ஓருரையும் இயற்றினர்.



வண்ணை நகரின்கண்ணே வைத்திலிங்கச் செட்டியாரால் கட்டுவிக்கப்பட்டுச் சகாப்தம் ௧௭௧௯-ம் வருஷமாகிய சாதாரண வருஷம் சித்திரை மாதம் பிரதிட்டை செய்யப்பெற்று நித்திய நைமித்தியங்களில் ஒரு சிறிதுங் குறைவுபடாது ஒழுங்குபெற நடாத்திவரப்படும் ஓர் பாரிய சிவாலயம் உண்டு. இக் கோவிற் றிருப்பணியை நிறைவேற்றிய தருமகருத்தா யாழ்ப்பாணமுதற் காசிபரியந்தம் பலதரும சத்திரங்களைக் கட்டினர். இதன் மேல் பாகத்திலே வில்லூன்றி எனப் பெயர்பெற்ற வற்றாத ஒரு சிற்றேரி இருக்கின்றது. இவ்வேரி இராமசுவாமி இந்தியாவினின்றும் இலங்கைக்குத் தாவியகாலத்துத், தம் வில்லையூன்றத்தோன்றிய காரணத்தால் வில்லூன்றி எனவும், அவர் திருவடி தோய்ந்த இடந் திருவடிநிலை எனவும் பெயர் பெற்றன. ஏறக்குறைய ௧௫0-வருஷங்களுக்கு முன் கொச்சிக்கணேசையர் என்ற பிராமணப்பிரபு யாழ்ப்பாணத் திருந்தவர்களுந் தென்னிந்தியாவினின்று வந்தவர்களுமாகிய தமிழ்ப் புலவர்களைப் போஷித்துத் தமிழை வளர்த்துக்கொண்டு பெரும்புகழ் படைத்து வாழ்ந்த ஊர் வண்ணார்பண்ணை. இங்கே உலாந்தர் காலத்திற் சோழ மண்டலத்தினின்றும் வந்து குடியேறி நெசவுத் தொழில் செய்யும் வைஷ்ணவர்களாகிய சில சேணியரும் வசிக்கின்றார்கள். அவர்களுக்கு ஒரு விஷ்ணுவாலயம் உண்டு. இஃதன்றியும், சங்கானை நத்தங்களுளொன்றாய மூளாயைச் சார்ந்த பொன்னாலையிலும், கட்டைவேலி நத்தங்களுளொன்றாய் வல்லிபுரத்திலும் எழுந்தருளியிரா நின்ற கண்ணபிரானுக்கு நித்திய நைமித்தியங்களிற் குறைவுபடாது நடாத்தி வருந் தருமகருத்தாக்களும், அருச்சகர்களும், ஆராதனை புரிவோர்களும் சைவசமயிகள்.

முன்னாளையில் இலாடதேசத்தை அரசாண்ட சிங்கவாகுவின் குமாரன் விசயனென்பவனாற் கீரிமலைச் சாரலின்கணுள்ள திருத்தம்பலை என்னும் பதியிற் கட்டப்பெற்றதும், முசுகுந்தச் சக்கிரவர்த்தி, நளச்சக்கிரவர்த்தி அருச்சுனன்முதலிய பெரியோராற் றொழப்பெற்றதுமாகிய திருத்தம்பலேசுரன் திருத்தம்பலேசுவரியம்மன் கோவில்களில் நகுலமுனிவர் சுவாமிதரிசனஞ் செய்து அம்மலையின்கணிருந்து தவஞ் செய்யுநாளில் அவரது கீரிமுகமாறி மனுஷமுகம் பெற்ற காரணத்தால், அவ்வாலயங்கள் நகுலேசர் கோவிலெனவும் நகுலாம்பிகையம்மன் கோவிலெனவும் வழங்கி வந்தன. முற்காலத்தில் சுபதிட்ட முனிவர் பரராசசேகர மகாராசனுக்குச் சொல்லியபடியே, பறங்கிக்காரர் யாழ்ப்பாணத்தை பிடித்த ஒன்பதாம் வருஷத்திற் பரநிருபசிங்கந் தேகவியோகமடையப், பறங்கிக்காரரால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிபட்ட அக்கோவில்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் நன்முயற்சியால், இக்காலத்துள்ள சில புண்ணிய மகான்களால், உள்ளூர்களிலும் புறவூர்களிலுமுள்ள பல புண்ணியசீலரின் பொருளுதவியைக் கொண்டு, திருப்பணி வேலை நடத்தப்பட்டு வருகின்றன.

## விருத்தம்

இலகியசகாப்தமெண்ணூற் றெழுபதாமாண்டுதன்னி
லலர்பொலிமாலைமார்பனும்புவனேகவாகு
நலமிகுந்திடியாழ்ப்பாணநகரிகட்டுவித்து நல்லைக்
குலவியகந்தசுவாமிகோவிலும்புரிவித்தானே.

## வெண்பா

முன்னாட்குளக்கோட்டன் மூட்டுந்திருப்பணியைப்
பின்னாட்பறங்கிபிடிப்பனே—பொன்னாரும்
பூனைக்கண் செங்கண்புகைக்கண்ணர்போய்மாற
மானே வடுகாய்வரும்.

## விருத்தம்.

திருமருவுயாழ்ப்பாணநாட்டையாண்ட
சிங்கையாரியன்குலத்தைத்தீங்குசெய்து
பெருமையொடுகாலயுத்தியானிமாதம்
பிலிப்பனெனும்பறங்கிகிளையரசையாண்டு
குருநெறியுமனுநெறியுமில்லாதாக்கிக்
கொடுமைசெய்து நாற்பஃதாண்டளவும்போக்க
உருமருவுமுதயகிரியிரவிபோல
வுலாந்தேசுமன்னவன்வந்துதிப்பன்றானே.

உதிக்கின்றவிளம்பிதனிலானிமாத
மொன்பதிணிலுலகுபுகழுலாந்தேசண்ணல்
மதிக்கின்றமனப்பறங்கிகிளையையெல்லாம்
வாள்வலியாலுயிர்தொலைத்துவாரியள்ளிக்
கொதிக்கின்றதென்கடலிலடையவீசிக்
கோட்டையொப்புக்கொண்டேற்றுக்கொடியுந்
துதிக்கின்றயாழ்ப்பாணநகரிதன்னிற் தூக்கித்
சோதிதிகழ்மணிமகுடஞ்சூட்டினானே.

சூட்டியபின்னூற்றின்மேலையெட்டாண்டு
தொல்வினைபோல்வல்வினைகளெல்லாஞ்செய்தே
ஈட்டுபொருளுள்ளதெல்லாங்கவர்ந்துதேடி
யிடர்விளைத்தியாவரையுமிழிகோலாக்கிக்
கூட்டுறுமின்மினிவீழ்ந்தக்கினியின்மாய்ந்த
கொள்கையெனவவன்குலமுநாசமாக
நாட்டுபுகழ்யாழ்ப்பாணநாடெங்கெங்கு
நன்மைபெறச்சைவநெறிநடக்குந்தானே.

யாழ்ப்பாண வைபவம் முற்றுப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org